உ

# வீரஸிம்ஹன்

(அல்லது)

388

## மெய்க்காதலின் இரகசியம்.

By

N. விஸ்வநாதய்யர்

Author of

(*Rajasekara or The Three Mysterious Outlaws.*)

தஞ்சை

'பூர்ணாநந்த அச்சுக்கூடத்திற்'

பதிப்பிக்கப்பட்டது

ாபிரைட்.]    1928    விலை அணா 8

388

# Dedicated

–To–

The Memory of My Beloved Mother

R. Nagasubbu Ammal,

**A**

**Devotee of Sri Meenakshi**

**of**

**MADURA.**

# PREFACE

It has been my aim in writing this play to present to the public a drama not lengthy and at the same time to suit the tastes of the modern times and I feel that it satisfies both these requirements. It can, I am confident, be acted as a matinee without omitting any portions.

The public are hereby informed that previous permission should be obtained before staging either this or any other play of mine

Before concluding, I thank my friend Mr. V. Seshadri Ayyar, who in spite of his multifarious works, has been kind enough to help me in all possible ways in getting this book ready.

"SRI SKANDHA BHAVANAM,"
1476. South Rampart,
TANJORE.

N. Viswanathan.

# வீரஸிம்ஹறன்

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| பாஸ்கரவிஜயன் | ... | கூர்ஜரதேசத்து மன்னன் |
| வீரஸிம்ஹறன் | ... | பாஸ்கரவிஜயனது புதல்வன் |
| இந்திரஸேனன் | ... | வீரஸிம்ஹறனது சிறியதந்தை |
| குநரவர்மன் | ... | கூர்ஜரதேசத்து அமைச்சன் |
| சந்திரஹாஸன் | ... | வீரஸிம்ஹறனின் நண்பன் |
| ஜயசீலன் | ... | உதயபுரி அரசன் |
| வீரநாதன் | ... | ஜயசீலனின், ராணுவவீரன் |
| கருணாகரன் | ... | உதயபுரி சிறைச்சாலைத் தலைவன் |
| சுகுணதீரன் | ... | பத்மாக்ஷியின் சகோதரன் காவலர்களின் தலைவன் |
| சுப்புசாஸ்திரிகள் | ... | ஓர் புரோகிதர் |
| வைத்திநாததீக்ஷதர் | ... | கூர்ஜரஅரண்மனைப்புரோகிதர் |
| இராஜேஸ்வரி | ... | வீரஸிம்ஹறனது தாய் |
| விஜயாள் | ... | ஜயசீலனது புதல்வி |
| பத்மாக்ஷி | ... | விஜயாளது தோழி |

இன்னும் நாட்டியப்பெண்கள், காவலர்கள், வீரர்கள் முதலானோர்

## நாடகம் நிகழ்விடம்.

கூர்ஜரத்திலும், உதயபுரியிலும், இடையே உள்ள அடர்ந்த காடு மலைகளிலுமாம்.

உ

# வீரஸிம்ஹன்

(அல்லது)

## மெய்க்காதலின் இரகசியம்.

### அங்கம் 1.—காக்ஷி 1.

இடம் :—பாஸ்கர விஜயன் சாய்ந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்த வண்ணம் யோசித்துக்கொண்டிருக்க அவர் மனைவி இராஜேஸ்வரி பிரவேசம்.

இரா. நாதா, பிராணநாதா! (அவர் பேசாமலிருப்பதை அறிந்து) எனதப்பே! நான் கூப்பிடுகின்றதைக்கூடத் தாங்களறியாமல் ஏதோ யோசனைசெய்து கொண்டிருக்கின்றீர்களே! என்ன யோசனை?

பா. வி. இராஜேஸ்வரி! அதிமுக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றி யான் ஆலோசித்துக் கொண்டிருந்ததால், நீ வந்ததைக்கூட கவனிக்க முடியவில்லை. (தற்செயலாய் பாஸ்கர விஜயனது சகோதரன் இந்திரஸேனன் அங்குவந்து அவர்களறியா வண்ணம் மறைந்திருந்து நடக்கும் சம்பாஷணைகளை அறிகின்றான்.)

இரா. அத்தகைய அதிமுக்கியமான விஷயத்தை யான் அறிய அனுமதி யளிப்பீரோ.

பா. வி. அதற்கென்னதடை, உனக்குங்கூடவா தெரிவிக்காதிருப்பேன். நமது மைந்தன் வீரஸிம்ஹனுக்குத் தக்கபருவம் வந்துவிட்டதனால் அவனுக்கு இணையான கன்னிகை ஒருவளைத்தேடி மணம்புரிவிக்க ஏற்பாடுசெய்ய வேண்டியதைப்பற்றித்தான் யோஜனை. இவ்விஷயத்தில் உன் அபிப்பிராயமென்ன?

இரா. என் அபிப்பிராயமா! தாங்கள் யோசித்தபடியே தான் என் அபிப்பிராயமும். இவ்விஷயமாக நானே தங்களிடம் பேசலா மென்றிருந்தேன். ஈஸ்வர சங்கல்ப மாகத்தாங்களே அவ்விஷயத்தைப்பற்றி ஆலோசிப்பதை யோசிக்க, என்னை அறியாமலே எனக்கு உற்சாகம் மேலிடுகின்றது. நமது மைந்தன் வீரஸிம்ஹன், சகல கலைகளிலும் வல்லவனுகி, மணப்பருவத்தையுமடைந்து விட்டான். இனி நாம் சும்மா இருத்தலாகாது. நான் ஏற்கனவே தங்களுக்குத் தெரிவித்தபடி, உதயபுரி அரசன், ஜயசீலன் புதல்வியான விஜயாளையே, நம் குழந்தைக்குத் திருமணம் செய்விக்கவேண்டும். நானும் அவளை இரண்டொரு சமயங்களில் பார்த்திருக்கின்றேன். அவளுக்கு இணையான ராஜகுமாரியை, யான் இதுவரையுங் கண்டிலேன். இயற்கைக்குணம், அழகு, கல்வி, இவைகளில் எந்தக் கன்னியும் அவளுக்கு ஈடாகாள். நம் குமாரனுக்கு ஏவ்விதத்திலும் தகுந்தவள் அவளே. மேலும் பல தேசத்து ராஜகுமாரிகளின் படங்களை வீரஸிம்ஹனிடம் காண்பித்தபொழுது அவன் விஜயாளின் உருவப் படத்தையே கண்டு வியப்புற்றதாக எனக்குத் தோற்றிற்று.

பா. வி. ஆயினும் ஜயசீலன் என்னுடன் சதா துவேஷமன்றோ பாராட்டி வருகின்றான். சில வருடத்திற்கு முன்பு எனக்கும் அவனுக்கும் யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் அவன் சகோதரனை விக்கிரம வீரனைக் கொன்று அவனையும் முறியடித்தேன். அதனால் என்னை விரோதித்துக் கொண்டிருக்கின்றான்.

இரா. அப்படியானால், உமது சகோதரர் இந்திரஸேனர் அடிக்கடி அந்நகரத்திற்குச் சென்று வருகின்றனரே.

பா. வி. இராஜேஸ்வரி! ஒருக்கால் அவர்கள் இருவரும் ஸ்நேகிதமாயிருக்கலாம். அதற்கு நாம் விசாரப்பட்டு முடியுமோ. மேலும் ஜயசீலன் புதல்வியை, இவன் மணம் செய்து கொள்ளப்போவதாகவும் கேள்விப்பட்டேன்.

இரா. ஆமாம்! உமது சகோதரருடைய அழகிற்கும் அறிவுக்கும் விஜயாளைப்போன்ற கன்னிகைதான் வேண்டும்! அவமானம்! அவமானம்! நாட்டியப் பெண்களிடத்தில் விளையாடிக்கொண்டும், மிதமிஞ்சி மதுவுண்டும், தன்

காலத்தை வீணே கழிக்கின்றுரே! ஒரு யோக்கியதையு மில்லையே.

பா. வி. பெண்ணே! என் சகோதரன் இன்னும் மணம் ஆகாதவன்தானே. அதனுல்தான் இப்படியாகத் தன் காலத்தை வீணே கழித்துவருகின்றுன். என்னைப்போல் சம்சார சாகரத்தில் ஆழ்ந்தால், சரியான வழிக்குத் திரும்பி விடுகின்றுன். வீணுக அவன்மேல் இப்பொழுது நிந்தனை கூறலாகாது. பாலியமன்றே! (இச்சமயம் மறைந்திருந்த இந்திர ஸேனன் காவலனின் மூலமாகத் தன் வரவை பாஸ்கர விஜயனுக்குத் தெரிவிக்கின்றுன்.)

காவ. மகாராஜ்! இந்திரஸேன மகாராஜர் தங்களைக் காண வேண்டுமாம்.

இ. ஸே. அப்படியானுல், நான் இவ்விடத்தைவிட்டுச் செல்லுகின்றேன்.

பா. வி. நீ இவ்விடமே இரு. நான் அவனைக்கொண்டே நமது வீரஸிம்ஹனுக்கு, ஜயசீலன் புதல்வி விஜயாளை மணம் செய்விக்குமாறுசெய்து, உன்னையும் சந்தோஷிப்பிக்கின்றேன். காவலா! சீக்கிரமாக என்சகோதரனை வரச்சொல். (காவலன் உத்திரவுடன்செல்ல இந்திர ஸேனன் பிரவேசம்)

இ. ஸே. அண்ணு! மன்னிக்கவேண்டும். யான் இவ்விடம் வந்ததனுல் தங்களுடைய சம்பாஷணைக்கு ஏதேனும் பங்கம் நேரிட்டிருக்குமோவென அஞ்சுகின்றேன்.

பா. வி. இந்திரஸேனு! அப்படி யொன்றுமில்லை, இந்த சந்தர்ப்பத்தில் நீ இங்கு வந்ததைப்பற்றி எனக்கும் உன் மதனியாருக்கும் மிகவும் சந்தோஷம். மேலும் உன்னுலேயே, ஒரு மங்களமான காரியம் முடியவேண்டியதாய் இருக்கின்றபடியால், உன் உதவி அவசியம் வேண்டும்.

இ. ஸே. அண்ணு! எண்ணிய கருத்தைச் சீக்கிரமே தெரிவியும். என்னுல் இயன்ற வரையிலும் உதவிசெய்ய யான் தங்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன்.

பா. வி. இந்திரஸேனு! நம் குமாரன் வீரஸிம்ஹனுக்கு, உதய பூரியின் அரசன் ஜயசீலன் புதல்வி விஜயாளை, மணம்

செய்யவிக்க எண்ணியுள்ளோம். நீ அவனுக்கு மிகவும் வேண்டியவனானபடியால், இம்மணத்தை முடித்து வைக்கவேண்டியது உனது கடமை.

இ. ஸே. (தனிமையில்) சற்றுமுன்பு என்னை இகழ்ந்து பேசியதை யானோ மறப்பவன்! யார், யாரை மோசம் செய்கின்றார்கள் என்பது சீக்கிரமே விளங்கும். இருக்கட்டும்— அண்ணா! விஜயாள் நம் வீரஸிம்ஹனுக்கு ஏற்றவள் தான். ஆயினும் அவள் தந்தை ஜயசீலன் கொஞ்சம் வஞ்சகமும், கர்வமும் உடையவனாயிற்றே என்றுதான் யோசித்தேன். இருந்தாலும் அவனை நம்வழியில் திருப்பி விடலாம். எல்லாவற்றிற்கும் நமது அமைச்சர் குரூரவர்மனை நமது வீரசிங்கனின் உருவப்படத்துடன் இன்றே ஜயசீலனிடம் அனுப்பி, மணத்திற்கு வேண்டிய ஏற்பாட்டைப் பேசிவரச் செய்வோம் அவன் இதற்குச் சம்மதப்படுவான் என்றே நினைக்கின்றேன்.

பா. வி. தம்பீ! எதைச் செய்தாலும் அவைகளெல்லாம் உன்னுடைய பொறுப்பு. மணத்திற்கு வேண்டிய காரியத்தைச் சீக்கிரமே செய்வாய். இன்றையதினமே நமது அமைச்சரை அனுப்பி விடு. இராஜேஸ்வரி! இனி நீ கவலைப்பட வேண்டாம். சீக்கிரமே யாவும் இனிதே முடியும். வா! நாம் செல்லலாம். இந்திரஸேனா! தாமதம் செய்யாதே. (இருவரும் செல்லல்)

இ. ஸே. இன்றே அனுப்புகிறேன். (யோசித்து) என்னைப்புத்தியில்லாதவன் என்று நினைத்தார்கள் போலும். அடே! எனது வேலையின் திறமையை சீக்கிரமே அறிவாய். ஜயசீலனைக்கொண்டே உன்னைக் கருவறுத்து, அவன் புதல்வியை, நானே மணம்செய்து கொள்ளுகின்றேன் பார். யாரடா காவல்! (காவலன் பிரவேசித்தல்) சீக்கிரமாகச் சென்று மந்திரி குரூரவர்மரை என்அறைக்குவரச்சொல்.

காவ. உத்திரவு (இருவரும் செல்லல்)

(காக்ஷி முடிகிறது)

## அங்கம் 1.—காக்ஷி 2.

இடம் :—இந்திரஸேனனின் *தனி அறை.*

இ. ஸே. (யோசித்தவண்ணம் உலாவிக்கொண்டிருத்தல்.) ஆம் ! நமது மந்திரி குரூரவர்மனை நம் கைவசப்படுத்திக் கொண்டால் தான், நமது எண்ணம் கைகூடும். இவனைத் தூண்டுகோலாக வைத்துக்கொண்டே இனி ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டும். இவனே நமது கையாள். நம் வார்த்தைக்கு இரண்டு செய்யான். அப்படிச் செய்வதாகப் புலப்படினும், இவனைப் பயமுறுத்தி என் வழியில் திருப்ப என்னால் முடியும். யாரது ! ஓகோ குரூரவர்மனா. (குரூரவர்மன் பிரவேசம்)

கு. வ. அரசே வந்தனம் ! தங்களுடைய சமூகத்தைப் பார்த்து வெகு நாளாகியதால், என்னைக் கூப்பிட்டு அனுப்பிய உடனே ஓடோடியும் வந்தேன். என்னால் ஆகவேண்டிய காரியம் ஏதாகினும் இருந்தால் உடனே தெரிவிக்கவும். இப்பொழுதே செய்து முடிக்கின்றேன்.

இ. ஸே. இவ்விராஜ்ஜியத்து முதன் மந்திரியாக இருந்துவந்த குணசீலரை ஒழித்துவிட்டு அப்பதவிக்கு என் உதவியால் வந்த நீ இப்பொழுது என்னை மறந்துவிட்டனை. அந்த இரகசியங்களெல்லாம் ஒரு புறமிருக்கட்டும். இப்பொழுது உன்னால் ஒரு பெரிய காரியம் நிறைவேற வேண்டியிருக்கின்றது. அது நிறைவேறி விட்டால், நம்மைப் போன்ற பாக்கிய சாலிகள் இவ்வுலகில் வேறொருவருமிரார் என்றே சொல்வேன்.

கு. வ. பிரபோ ! தாங்கள் கொண்ட எண்ணத்திற்கு மாறாக நான் எப்பொழுதாவது நடந்ததுண்டோ ! உள்ளக் கருத்தை வெளியிட்டாலல்லவோ உண்மையான பதில் கூறமுடியும்.

இ. ஸே. நண்பா ! நீ என்னுடைய ஆப்த நண்பனாயிருப்பதாலும் இதுவரையிலும் நான் செய்துவந்த அநேக காரியங்களில் என்னுடன் ஒத்து உழைத்து வருவதாலும் உனக்கும், எனக்கும் நன்மையை விளைவிக்கக்கூடிய ஒரு பெரிய காரியத்தை யான் உன் உதவியைக்கொண்டு

செய்யத் தீர்மானித்துள்ளேன். ஆயினும், நான் இது வரையில் செய்துவந்த காரியங்களுக்கும், இனி செய்யப் போவதற்கும் ஓர் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கின்றது. இக்காரியத்தில் அநேகருடைய விரோதம் நேரிடும், பல கொலைகள் நேரிடும், ஒருக்கால் யானே இறக்கும்படியும் நேரிடும். ஆனால் எண்ணிய காரியம் நிறைவேறிவிட்டாலோ, நம்மிருவர் குடும்பமும் நீடூழி காலம் க்ஷேமமாக வாழும் என்பதற்கு ஐயஞ் சிறிதுமில்லை. ஆதலால் தீரயோசித்து இப்பொழுதே பதில் சொல்லவேண்டும்.

து. வ. நண்பரே! தங்கள் எண்ணத்தைச் செவ்வனே அறிந்தாலல்லவோ நான் பதில் கூறமுடியும். உட்கருத்தை வெளியிடாது தாமதிப்பதேனே.

இ. ஸே. உரைத்திடுவேன். ஆயினும் இந்த இரகசியம் அறிந்தோ, அறியாமலோ, உன்வாயினின்று வெளிவருமாகில், நான் உலகில் ஒரு க்ஷணங்கூட உயிருடன் வாழமுடியாது. பிறகு உன் இரகசியங்களெல்லாம் வெளிப்பட்டுப்போய் விடுமாதலால் நீயும் இறப்பாய். ஆதலால் நான் எப்படி உன் இரகசியத்தை வெளியிடுவதில்லையென்று சத்தியம் செய்துகொடுத்தேனே அதேபோல் நான் கூறப்போகும் இரகசியத்தை உயிர்போனாலும் வெளியிடுவதில்லை யென்றும், அதன்படி நடப்பேன் என்றும் நீ சத்யம் செய்து கொடு.

து. வ. (தனியாக) ஆ! நாம் முன்பு செய்த சதியாலோசனைகளை அறிந்ததனாலன்றோ இவன் நம்மை ஓர் பதுமைபோல் ஆட்டிவைக்கின்றான். என்ன செய்வது. இவன் சொற்படி கேட்டுத்தான் ஆகவேண்டும் இல்லாவிடில், நான் உயிரிழப்பதுடன், என் குடும்பமே நாசமாய்ப் போய்விடும். தற்சமயம் இவன் சம்பாஷணைகளைக் கவனித்தால் ஏதோ ஒருபெரிய சதியாலோசனை செய்கின்றான்போல் தோன்றுகிறது. இருக்கட்டும். எதுவரினும் வரட்டும். எல்லாம் அவன் செயலன்றோ. நம்மால் ஆவது யாதொன்றுமில்லை.

இ. ஸே. நண்பா! என்ன தயங்கிநிற்கின்றாய். சீக்கிரம் எனக்கு உண்மையான வாக்குறுதி கொடு.

கு. வ. அரசே! என் குடும்பத்தின்மீதுசத்யமாக, உமது இஷ்டப்படி நடக்க யான் சித்தமாய் இருக்கின்றேன். இது சத்யம்.

இ. ஸே. மிகவும் சந்தோஷம். குரூரவர்மா! நீ செய்துகொடுத்த பிரதிக்ஞையினின்றும் மீறமாட்டாய் என்ற முழு நம்பிக்கையுடன் எனது கருத்தை வெளியிடப்போகின்றேன். ஜாக்கிரதை! உன் உயிர் வேண்டுமானால், சத்தியத்தைக் காப்பாற்றிக்கொள். (நான்கு பக்கங்களிலும் பயத்துடன் பார்த்துவிட்டு) நண்பா! நீண்டநாட்களாக யான் இந்த ராஜ்யத்தை அரசாள வேண்டுமென்கிற ஆசைத் தீப் பட்டெரிய, என்னையும் ஏமாற்ற நினைக்கும் என் தமயனைக் கொன்றாகிலும் இந்த ராஜ்யத்தை அரசாளத் தீர்மானித்திருக்கின்றேன். இப்பொழுதோ அரசன் தன் மைந்தனுக்கு விவாகம் செய்வித்து முடி சூட்டவும் எண்ணியுள்ளான். இவ்விரண்டு விஷயங்களும் நிறைவேறி விட்டால், வீரஸிம்ஹன், அடியோடு என்னைத் தொலைத்துவிடுவான். ஆதலால், அவனையும் வெல்ல நீ உதவி செய்ய வேண்டும்.

கு. வ. நண்பரே! தம் குடிகளுக்குத் தந்தைபோல் நின்று, அவரவர்களின் இடுக்கண்களை யகற்றி, நீதிவழுவாது பரிபாலனம் செய்யும் மன்னனையோ கொல்ல நினைத்தீர். வேண்டாம்! வேண்டாம்!!

இ. ஸே. என்ன தெரிவித்தாய்! அடே! எனக்குமா நீ புத்தி புகட்ட ஆரம்பித்தனை. உன் யோக்கியதையை மறந்து என்னிடம் வார்த்தையாடுகின்றாய். கொலைகாரனே! நீ இந்த அரசாங்கத்திற்குச்செய்த துரோகங்களையெல்லாம் யான் கண்டுபிடித்தும், உன்னைக் காண்பித்துக்கொடாமல் இருந்தது என்மீது குற்றம். நீ அச்சமயம் எத்தகைய வாக்குறுதியை எனக்குச் செய்து கொடுத்தனை? இப்பொழுது முதன் மந்திரிஸ்தானம் கிடைத்தவுடன் என்னையே ஏமாற்றப் பார்க்கின்றாயே. ஜாக்கிரதை! முதன் மந்திரி குணசீலரை நீ கொல்வதற்குத் தயாரித்த ஔஷதமும், அதைச் செய்துகொடுத்த இரு விஷவைத்தியர்களும் இன்னமும், என் கைவசத்தில் இருக்கின்றார்கள் என்பது ஞாபகமிருக்கட்டும். ஆதலால், நான் செய்யப்போகும் காரியங்களிலெல்லாம், என்னுடன் ஒத்து உழைத்தால் ஆயிற்று, இல்லாவிடில் நம்இருவரில் ஒருவர்

இப்பொழுதே, கூற்றுவனிடம் செல்லவேண்டும். (வாளைக் கையிலேந்திக்கொண்டு) சீக்கிரமாகப் பதிலளிப்பாய் !

து. வ. (தனக்குள்) இத்தரும சங்கடத்திற்கென்ன செய்வது நாம் ஆதியில் கொடுத்த வாக்கின்படி நடந்தே தீரவேண்டும். இல்லாவிடில், நாம் இறப்பதுடன், நமது குடும்பமும் பாழாய்ப்போகும். யார் அரசாக்ஷி செய்தால் நமக்கென்ன. நம்மை இப்பதவிக்குக் கொண்டுவந்து நிலைநிறுத்தியவன் இவனே. அரசே! இன்று முதற்கொண்டு தங்களுடன் எக்காரியத்திலும் ஒத்து உழைக்கச் சித்தமாயிருக்கின்றேன். நீங்கள் இனி கவலைப்படவேண்டாம்.

இ. ஸே. பேஷ்! இப்பொழுதன்றோ நீ எனது உண்மையான நண்பன். நண்பா! நம்அரசன் தன் மைந்தனுக்கு உதயபுரி அரசன் ஜயசீலன் புதல்வியான விஜயாளை மணம்செய்விக்கஎண்ணங்கொண்டு, என்னை அதற்குவேண்டிய ஏற்பாடுகளைச்செய்யக் கட்டளை யிட்டதுமன்றி, உன்னையும் மணவிஷயமாகப் பேசிவர, ஜயசீலனிடம் அனுப்பும்படி கூறினர். ஜயசீலனே, என்சகோதரனை வெறுக்கின்றான். என்னையோ நேசிக்கின்றான். ஏனெனில் என் சகோதரனுக்கும்தெரியாமல், நான்அவனுக்குப் பலதடவைகளில் உதவிபுரிந்திருக்கின்றேன். நீ யென்ன செய்யவேண்டுமெனில், ஜயசீலனை, நம நாட்டின்மீது படையெடுக்குமாறு செய்விப்பதன்றி, விஜயாளையும் நான் மணக்க இஷ்டப்படுவதாகத் தெரிவிப்பாய். அவன் உடனே இவைகளுக்கு இணங்குவான் என்பதற்கையமில்லை.

து. வ. ஜயசீலர் தங்கள் கருத்திற்கு ஒப்புவரா!

இ. ஸே. அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். யுத்தச்செலவுகளையெல்லாம், யான் பார்த்துக்கொள்வதாக அவனிடம் தெரிவி. முன்பணமாக நூறுபைபவுன்களை, இப்பொழுது உன்னுடன் எடுத்துச்சென்று, உதயபுரியின் பொக்கிஷச்சாலையில் முன்பே செலுத்திவிடில் பின் ஜயசீலன் நம் வழிக்கு வந்துவிடுவான். வீரஸிம்ஹனை யுத்தத்தில் முறியடித்துக்கொன்றுவிட்டால். நான்தான் பட்டத்துக்குரியவனென்றும், பின்னல் அநேக உதவிகள் நான் அவனுக்குச் செய்வேன் எனவும் தெரிவி. அவன் இவைகளுக்கு ஒப்புக்கொள்வான். ஜாக்கிரதை, வீரஸிம்ஹனின் மண விஷயமாக, ஜயசீலனிடம் போவதாகி வெளிக்குத்

தெரியவேண்டுமாதலால் வீரஸிம்ஹனின் படத்தையும், அலங்காரத்தோடு எடுத்துச்செல். அப்பொழுதுதான் உன்னை ஒருவரும் சந்தேகிக்க மாட்டார்கள்.

தூ. வ. மகராஜ்! அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். நான் இன்றே செல்கின்றேன்.

இ. ஸே. இதோ எனது பொக்கிஷச் சாலையின் திறவுகோல். நான் தெரிவித்தபடி, பொருளை எடுத்துக்கொண்டு, சாமர்த்தியமாக, ஜயசீலனை நம் வசப்படுத்தி இந்நாட்டின்மீது படையெடுக்கச் செய்துவிடும். பின்னால் ஆகவேண்டிய காரியத்தை யான் பார்த்துக்கொள்கின்றேன்.

தூ. வ. உத்திரவுப்படியே (செல்லல்.)

இ. ஸே. எனது தமையனுக்கும், ஜயசீலனுக்கும் எப்பொழுதும் ஏழாம் பொருத்தம். ஜயசீலன் ஒரு பொழுதும் வீரஸிம்ஹனுக்குத் தன்மகளை மணம்செய்விக்க ஒப்பமாட்டான். யுத்தத்திற்குத்தயாராக வந்துவிடுவான். யுத்தம்நடக்கும். வீரஸிம்ஹன் யுத்தத்தில் இறப்பான். அவன் இறப்பதற்குள்ளாக அண்ணனைநான்தீர்த்துவிடுவேன். பிறகுநானே அரசன். சந்தேகமில்லை. இராஜேஸ்வரி! என்னைக்குடிகாரனென்றும், ஸ்திரிலோலன் என்றும், புத்தியில்லாத கொடியவன் என்றும் என் சகோதானிடம் தெரிவித்தனையே. ஆம்! ஆம்!! நீ கூறியவை உண்மைதான். (அறைக்குச்சென்று ஓர் மருந்து சீசாவை எடுத்துவந்து) இத்திராவகத்தில் ஒரு சொட்டு என் தமையனின் உடம்பில் செலுத்திவிட்டேனுல் இன்னும்பதினைந்து நாளைக்குள் வைகுண்டம் ஏகிவிடுவான். அதற்கு முன்பே, வைவசுத பட்டணத்தில் தன் தந்தையை எதிர்கொண்டு அழைப்பதேபோல் காத்துக்கொண்டிருப்பான் வீரஸிம்ஹன். பிறகு நானே அரசன்! விஜயாளே என் மனைவி! சமயம் வரும்பொழுது இக் குரூரவர்மனையும் ஒழித்துவிடுவேன். முயற்சி செய்தால் எக்காரியம்தான் கைகூடாது. இருக்கட்டும், இன்றே இம்மருந்தை அண்ணனுக்கு அளித்துவிடுகின்றேன். (சந்தோஷத்துடன் செல்லல்.)

(காக்ஷி முடிகிறது)

## அங்கம் 1.---காக்ஷி 3.

---

இடம் :—உதயபுரியின் அரண்மனையின் அந்தப்புரம்.

(ஜயசீலன் புதல்வி, விஜயாள், தலைவலியினால் வருத்தப்பட்டுக் கொண்டிருக்க, தோழி பத்மாக்ஷி அவளுக்கு விசிறிக் கொண்டிருத்தல். ஜயசீலன், விஜயாளைப் பார்த்தவண்ணம் வருத்தத்துடன் நின்று கொண்டிருத்தல்.)

ஜ. சீ. கண்ணே விஜயா! இப்பொழுது தலைவலி எவ்வாறிருக்கின்றது.

வி ஜ கொஞ்சம் வலி மட்டாகவே இருக்கிறது.

ஜ. சீ. விஜயா! உன்னைச் சந்தோஷப்படுத்துவதற்காக, அநேக ராஜகுமாரர்களின் உருவப்படங்களை அனுப்பினேனே. அவைகளையெல்லாம் பார்த்தனையா?

வி ஜ தந்தையே! பார்த்தேன். ஆயினும் இதோ இப்படத்தில் உள்ள, ராஜகுமாரரின் உருவம்தான், மிகவும் அழகாக இருக்கின்றது. மேலும் வீரர்களுக்குரிய லக்ஷணங்கள் யாவும், இவரிடத்தில் காணப்படுகின்றன. ஏன் அப்பா! இவ்வீரர் யார்?

ஜ. சீ. (படத்தை வாங்கிப்பார்த்துக் கோபத்துடன்) இவனா! இச்சண்டாளனா! என் விரோதியும், என் சகோதரனை யுத்தத்தில் வஞ்சனையாகக் கொன்றவனுமாகிய கூர்ஜர அரசனான பாஸ்கரவிஜயன் புதல்வன் வீரஸிம்ஹறனன்றோ இவன்! விஜயா! அதைக்கொடு யிப்படி. (அதைப் பிடுங்கி, கிழித்து காலால் மிதித்தல்) இப்படத்தை மற்றைப்படங்களுடன் தெரியாமல் வைத்துவிட்டேன். என்ன மடத்தனமான காரியத்தைச் செய்தேன். அடே! கூர்ஜரதேசத்துக் கிழட்டுப்பயலே! கூடியசீக்கிரம் உன்னைப் பழிக்குப்பழி வாங்குகின்றேன்.

வி ஜ தந்தையே! இது என்ன கோபம். ஐயோ! மிகவும் அழகான படத்தைக் கெடுத்துவிட்டீர்களே!

ஜ. சீ. இவனது குணத்தை நீ யொன்றும் அறியாய். இதோ இச்சண்டாளன் குடும்பத்தில் தவறி உதித்த, மற்றொரு வீரரின் படத்தைக் காட்டுகின்றேன் பார். (வேறொரு படத்தை விஜயாளிடம் காட்டி) இப்படத்திலுள்ள அரசர் எவ்வளவு அழகாக இருக்கின்றார் பார். இவர்தான் வீர ஸிம்ஹனின் சிறிய தந்தையாகிய இந்திரஸேன மகாராஜர். இவர் ஒரு சமயத்தில் என் உயிரைக்காத்துநின்ற உத்தம வீரர். இவரையன்றோ கொண்டாட வேண்டும் நாம்.

(ஓர் காவலன் பிரவேசம்.)

காவ. மகாராஜ்! இந்திரஸேன மகாராஜரிடமிருந்து தங்கள் சமூகத்தை நாடி ஓர் பிரபு வந்திருக்கின்றார்.

ஜ. சீ. அப்படியாயின் சீக்கிரமாக அவரை இங்கு வரவிடு.

(பத்மாக்ஷியும் காவலனும் செல்ல தூரவர்மன் வருதல்)

ஜ. சீ. ஓ ஹோ குரூரவர்மரா! வரவேண்டும். என்னசமாசாரம் இன்னும் இரண்டாவது மந்திரி ஸ்தானத்தில்தான் இருந்து வருகிறீர்களோ?

தூ. வ. ஈசன் அருளாலும், இந்திரஸேனருடைய உதவியாலும் யான் முதல் மந்திரி பதவியை அடைந்துவிட்டேன்.

ஜ. சீ. மிகவும் சந்தோஷம். இந்திரஸேனர் சௌக்கியமாய் இருக்கின்றனரா?

தூ. வ. சௌக்கியமாக இருக்கின்றார்.

ஜ. சீ. ஏன் முன்போல் அவர் என்னிடம் வருவதில்லை. தன் உத்தம அண்ணனைவிட்டுப் பிரியவும் மனமில்லையோ.

தூ. வ. வராமலென்ன, இப்பொழுது ராஜிய விவகாரங்களின் தொல்லை அதிகம். எது எப்படியிருந்தபோதிலும் தங்களுடைய சிநேகத்தின் பெருந்தன்மையைப்பற்றி அடிக்கடி என்னிடம் கூறாதநாள் கிடையாது.

ஜ. சீ. அவருக்கு என்னிடத்தில் எப்பொழுதும் அந்தரங்கமான விஸ்வாசமுண்டு. அதிருக்கட்டும், தாங்கள் வந்த காரியமென்ன.

து. ந. அரசே! எமது மகாராஜர் தம் மைந்தன் வீரஸிம்ஹனுக்கு உமது புதல்வி விஜயாளை மணம் செய்விக்க எண்ணி, என்னை அவ்விஷயமாகப் பேசிவரும்படி உம்மிடம் அனுப்பினர். வீரஸிம்ஹனும் தம்முடைய பெண்ணை மணம் செய்துகொள்ள சம்மதித்தானும். இதோ எனது அரசகுமாரரின் படமும் கொண்டுவந்திருக்கின்றேன். இதை உமது புதல்வியிடம் காண்பித்து.........

ஜ. சீ. (கோபத்துடன் படத்தைப்பிடுங்கிக் கீழே எறிந்துவிட்டு.) குரூரவர்மரே! நீர் தப்பித்தீர். இந்திரஸேனர் பெயரை உச்சரித்ததற்காக, உம்மை உள்ளே வரும்படி கட்டளையிட்டேன். நீர் இம்மாதிரியான எண்ணத்துடன் இங்கு வந்ததை அறிந்திருப்பின் உள்ளே அழைத்திருக்க மாட்டேன். என் ஜன்மத்துவேஷியும், என்சொந்த சகோதரனைக்கொன்றவனுமாகிய உமது அரசன்மைந்தன் வீரஸிம்ஹனுக்கா என் அருமைப் புதல்வியை விவாகம் செய்து கொடுப்பேன். என் உயிர் போவதாலும்சரி, நான் ஒப்பமாட்டேன். அடிக்குப்பயந்து உளரும் பேடியைப் போல், என் வலுவைக்கண்டு அஞ்சி என்னுடன் உறவாட நினைக்கின்றனே உமது அரசன். மேலும் உமது வீரஸிம்ஹன் இருக்கின்ற அழகிற்கு என் கண்மணியைப்போன்ற பெண்மணி வேண்டுமோ. இனி இவ்விஷயமாகப் பேசிக்கொண்டு இவ்விடத்தில் நிற்கவேண்டாம், சீக்கிரமே செல்லும்.

து. வ. ஜயசீலரே! என் செய்கைக்கு மன்னிக்கவேண்டும். நான் உம்முடைய மனதில் இருக்கும் அந்தரங்கத்தை அறிவதற்கே இவ்வாறு ஓர் சூழ்ச்சி செய்தேன். இந்திரஸேனர் கூறியதைத் தெரிவித்தால்........

ஜ. சீ. இந்திரஸேனர் என்ன தெரிவித்தார்.

து. வ. அரசே! உண்மையாக உமக்கு எங்கள் அரசன்மீது வஞ்சகம் தீர்த்துக்கொள்ள விருப்ப மிருக்குமாயின், இந்திரஸேனர் கூறியபடி செய்தல்வேண்டும்.

ஜ. சீ. நீர் கூறுவது விளங்கவில்லையே!

து. வ. அரசே! தாங்கள் உடனே எங்கள் நாட்டின்மீது படையெடுத்து வரவேண்டுமென்றும், அப்படிச் செய்வதால் எமது அரசன் மீதும், அவன் மைந்தன் மீதும் பழய வஞ்சகத்தைத் தீர்த்துக்கொள்ளலாமென்றும், மேற்படி யுத்தச் செலவுகளையெல்லாம் தாம் பார்த்துக் கொள்வதாகவும், ஜயம் உமது பக்கம் உண்டாகும்படி செய்வதாகவும் தமது உண்மை நண்பரான இந்திரஸேன மகாராஜர் தங்களிடம் கூறும்படி தெரிவித்தனர். மற்றும் யுத்தச்செலவிற்கு முன்பணமாக நூறு பை பவுன்களைத் தங்கள் பொக்கிஷச் சாலையில், தங்களைக் காணுமுன்பே கொடுத்து ரசீதையும் பெற்று தங்களிடம் கொடுக்கும்படி தெரிவித்தார். இதோ அந்த ரசீது (ஓர் ரசீதைக் கொடுத்தல்) ஆதலால் இனி தடையொன்றும் செய்யாமல் இன்று முதற்கொண்டே ஆகவேண்டிய காரியத்திற்கு முயற்சிசெய்ய வேண்டும்.

ஜ. சீ. உண்மையாக யான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். குரூர வர்மரே! இந்திரஸேனர் தான் செய்யப்போகும் உபகாரங்களுக்கெல்லாம் என்னிடம் என்ன எதிர்பார்க்கின்றார்?

து. வ. தங்களுக்குத் தெரியாதா என்ன?

ஜ. சீ. தெரியவில்லையே! அது ஏதாயிருக்கும். ஏதாயிருப்பினும் நான் கொடுக்கச் சம்மதிக்கவேண்டும்.

து. வ. தங்கள் புதல்வியையே அவர் விரும்புகிறார்.

ஜ. சீ இவ்வளவு தானே! நண்பரே! முன்பு ஒரு சமயம் என் புதல்வி விஜயாளை அவருக்கு நான் மணம்செய்து கொடுப்பதாக வாக்களித்தேன். அதன்படி நடக்க இப்பொழுது நல்ல சமயம் வாய்த்தது. வீரஸிம்ஹனை யுத்தத்தில் தீர்த்துவிட்டேனானால், பாஸ்கர விஜயனுக்குப் பின் இந்திரஸேனர்தான் பட்டத்திற்கு வரவேண்டும். பின் என் புதல்வியை அவருக்கு மணம் செய்விப்பேனேயாகில், அவளும் ஓர் பெரிய ராஜ்யத்திற்கு ராணியாகி விடுவாள். பேஷ்! பேஷ்!! நண்பரே, கூடிய சீக்கிரத்தில் என் புதல்வி சௌக்கியமடைந்து விடுவாள். பின்னர் மணத்தை வெகு சீக்கிரம் முடித்துவிடலாம்.

அதற்குள்ளாக, நான் உமது நாட்டின்மீது நாளைய தினமே படையெடுத்து வருகின்றேன். இவ்விஷயத்தை இந்திரஸேனரிடம் தெரிவித்து, என் மனமார்ந்த வந்தனத்தையும் தெரிவிக்கவும்.

தூ. வ. அரசே! தாங்கள் பெண்கொடுக்க மறுத்ததையும், யுத்தத்திற்கு வருவதாகத்தெரிவித்ததையும் நானே எங்கள் அரசரிடம் கூறுதல் அழகல்ல. யுத்த முறைப்படி, என்னுடன் ஓர் தூதுவனை அனுப்பி, போரின் செய்தியைச் சொல்லுதலே நலம். அப்படிச்செய்தால்தான் என் வார்த்தையை நம்புவார்கள்.

ஜ. சீ. உண்மை. (ஒரு கடிதம் எழுதிவிட்டு) வீரநாதன்! வீரநாதன்!! (வீரநாதன் ஓடிவந்து மரியாதைசெய்தல்.) வீரநாதா! இக்கடிதத்தைக் கூர்ஜரதேசத்தரசனை பாஸ்கரவிஜயனிடம் கொடுத்து யுத்தத்திற்கு உடனே புறப்படும்படி கூறியதாகத் தெரிவித்துவா.

வீ. நா. உத்திரவு மகாராஜ்.

ஜ. சீ. குரூரவர்மரே! இவனை நீர்உண்மையாகநம்பலாம். ஆனால் இவ்வீரனுக்கு ஒருஆபத்தும் வாராமல் பாதுகாக்கவேண்டியதுஉமது கடமை.

தூ. வ. இவரைப்பற்றித்தாங்கள் கவலைப்படவேண்டாம். வீரரே என்னுடன்வாரும். நீர் எமது அரசரிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய விதத்தைப்பற்றி வழியில் தெரிவிக்கின்றேன். மகாராஜ்! வந்தனம் சென்றுவருகின்றேன்.

வீ. நா. வந்தனம் மகாராஜ்! உத்திரவுபெற்றுக் கொள்கின்றேன்.

ஜ. சீ. சென்றுவாருங்கள். (குரூரவர்மனும், வீரநாதனும் செல்லல்) பழிக்குப்பழி வாங்குங்காலம் வந்துவிட்டது. அடேபாஸ்கரவிஜயா! உன்னைப்பார்த்துக் கொள்கின்றேன் (விஜயாளைப்பார்த்துவிட்டு) ஐயோ பாவம் நமதுகுழந்தை அயர்ந்துநித்திரைசெய்கிறாள். இச்சமயம் நாம்இவளைத்தொந்தரைசெய்யலாகாது. ராணுவத்தலைவனிடம் நடக்கப்போகும் யுத்த சமாசாரத்தைப்பற்றிய விபரத்தைத் தெரிவித்து வருவோம். (செல்லல்)

வி ஜ (சம்பாஷணைகள் யாவும் அறிந்து மெதுவாக எழுந்திருக்கிருள்) ஹே! பவானி மாதா! துஷ்டபுத்தி உடையவர்களுக்கும், வஞ்சனைக்காரர்களுக்கும் உதவிசெய்ய உன் மனம் எப்படி இடம் கொடுத்தது. ஆ! இத்தகைய கொடிய தந்தையிடம் நான் உதித்தேனே. சற்றுமுன்பாக இரு வஞ்சனைக் கள்வர்கள், எண்ணிய எண்ணங்களையும், பேசிய சம்பாஷணைகளையும் யான் நினைக்க என் மனம் மிகவும் பீதியடைகின்றதே. ஐயோ! இப்பாழும் தந்தை செய்வதெல்லாம் போதாதென்று, என்னை இந்திரஸேனனுக்கும், மணம் செய்து கொடுப்பதாகத் தெரிவித்தனரே. அவன் படத்தைப் பார்க்கும் பொழுதே மகாக்கொடிய வஞ்சகனெனத் தோன்றுகிறதே. அச்சண்டாளனு, வீரஸிம்ஹருக்குச் சிறிய தந்தையாக வரவேண்டும். (குருரவர்மனல் அளிக்கப்பட்ட வீரஸிம்ஹனின் படம் கீழே கிடப்பதைப்பார்த்து எடுத்து முத்தமளிக்கிருள்) ஆ! வீரஸிம்ஹன். எவ்வளவு அழகான பெயர், என தரசே! என் செல்வமே! பாவியான் உம்மை என்று அடைவேனே. ஐயோ! பாழும்தந்தை உம்மையுத்தத்தில் கொன்றுவிடுவதாகவல்லவோ தெரிவித்தார். இருக்கட்டும், சாமர்த்தியமாக உம்மைக்கொன்று விடாமல் இவ்விடத்திற்கே கொண்டுவரும்படி செய்கின்றேன். ஆ! தந்தை அதோ வருகின்றூர், இவருடன் நம் காரியம் முடியும் வரையில் ஒத்து உழைத்தலே நலம். (படத்தை தலையணையின் அடிப்புரத்தில் வைத்துவிட்டு உட்கார்ந்துகொள்ளுகிருள்)

ஜ. சீ. கண்ணே! விழித்துக்கொண்டனையா.

வி ஜ பிதா நான் உறங்கவே இல்லை.

ஜ. சீ. அப்படியா! (நான்கு பக்கங்களிலும் சுற்றிப் பார்த்துக் கொண்டே) கண்ணே! கூடிய சீக்கிரம் என் சகோதரனைக்கொன்ற வஞ்சகனையும் அவன் மைந்தன் வீரஸிம்ஹனையும் யுத்தத்தில் கொன்றுவிடப் போகின்றேன்.

வி ஜ பிதா! அப்படிச் செய்யலாகாது. இருவரையும் உயிருடன் பிடித்துவந்து சிறைச்சாலையில் அடைத்து அவமானம்செய்து, பின்னர் சித்திரவதைசெய்து கொஞ்சம் கொஞ்சமாக உயிரைப் போக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் எனக்குச் சந்தோஷம். என் சிறிய தந்தையைக்கொன்ற பாதகன் பாஸ்கரவிஜயன் மைந்தன்

என்று நான் முன்பே அறிந்திருந்தேனேயாகில், அவன் படத்தைப் பார்த்தே இருக்கமாட்டேன்.

ஜ. சீ. கண்ணே ! இது என்ன பிரமாதம் அதற்காக நீ வருந்த வேண்டாம். உன் இஷ்டப்படியே அவ்விருவர்களையும் பிடித்து வருகின்றேன்பார். (கீழே சுற்றிப்பார்த்தல்.)

வி ஜ தந்தையே ! என்னதேடிக்கொண்டிருக்கின்றீர்கள். கீழே போட்டு மிதித்தீர்களே அப்படத்தைத்தானே.

ஜ. சீ. ஆமாம் ! அதைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

வி ஜ ஐயோ ! அப்போதே என்னைக்கேட்கலாகாதோ. அந்த விரோதியின் படம் இங்கிருப்பது எனக்குச் சற்றும் பிடிக்கவில்லையாதலால் அதை யெடுத்துக்கிழித்து அந்த ஜன்னலின் வழியாக எறிந்துவிட்டேன்.

ஜ. சீ. பேஷ். நல்ல காரியம் செய்தாய். பார், கூடிய சீக்கிரம் அப்பயலைப் பிடித்துத் தக்க சிக்ஷை செய்கின்றேன்.

வி ஜ ஆ ! தந்தையே ! தலைவலி அதிகமாகிறது. நான் சயனித்துக்கொள்ள வேண்டும்.

ஜ. சீ. படுத்துக்கொள். யான்சென்று வருகின்றேன். (செல்லல்)

(காக்ஷி முடிகிறது)

## அங்கம் 2.—காக்ஷி 1.

இடம்:—கூர்ஜரதேசத்து சபாமண்டபம்.

**பாஸ்கரவிஜயன், வீரஸிம்ஹன், சந்திரஹாஸன், இந்திரஸேனன்**
*சபையோர் முறையே வீற்றிருத்தல்.*

**பா. வி.** சபையோர்காள்! எல்லாம் வல்லஇறைவன் அருளாலும் நம் முன்னோர்களின் ஆசீர்வாதத்தினாலும், இவ்விராஜ்ஜியத்தை நாம் செங்கோல் செலுத்திவருகின்றோம். நமக்கோ இவ்வரசை, இனித்தாங்கத்தக்க சக்தியில்லை. ஆதலால் இதோ வீற்றிருக்கும் நமது மைந்தன் வீரஸிம்ஹனுக்குத் திருமண முடித்து, பின்னர் ராஜ்ஜியத்தையும் அளிப்பதாக எண்ணியுளோம். நம் மனைவியின் அபிப்பிராயப்படிக்கும், நம் சகோதரர் இந்திரஸேனன் முயற்சியின் படிக்கும், உதயபுரியின் அரசனான ஜயசீலன் புதல்வி விஜயாள் என்னும் பெண்மணியை வீரஸிம்ஹனுக்கு மணம் செய்விக்க எண்ணி, மணப்பேச்சுகளைப்பேசிவர நமது முதன் மந்திரி குரூரவர்மனை அனுப்பினோம். அவரும் இன்று சபைக்கு வருவதாக சமாசாரம் சொல்லியனுப்பியதால், இச்சபை கூட்டலானோம். காவலா! சீக்கிரமாக மந்திரியை வரச்சொல்.

(குரூரவர்மன் பிரவேசித்தல்)

**கு. வ.** அரசே! நமஸ்கரிக்கின்றேன். சபையோர்களே! வந்தனம். மகராஜ்! தாங்கள் ஜயசீலரிடம் என்னை அனுப்பியதற்கு மிகவும் வருந்துகின்றேன்.

**பா. வி.** நினைத்தேன். மந்திரி! என்ன சமாசாரம். சீக்கிரமாகத் தெரிவிப்பாய்.

(ஓர் காவலன் பிரவேசம்)

**காவ.** மகராஜ்! ஜயசீலரிடமிருந்து ஓர் யுத்த வீரர் வந்திருக்கின்றார். உடனே தங்களைக் காணவேண்டுமாம்.

**பா. வி.** யார்! யுத்தவீரன். சரி அவரை உள்ளே வரவிடு.

(வீரநாதன் வருதல்.)

வீ. நா. அரசே! வந்தனம். எம்முடைய அரசர் இக்கடிதத்தைத் தங்களிடம் சேர்ப்பிக்குமாறுதெரிவித்து, யுத்தத்திற்கு உடனே புறப்படும்படி தெரிவித்தார்.

வீ. ஸி. என்ன தெரிவித்தான்.

பா. வி. வீரஸிம்ஹா! அவசரப்படாதே. குரூரவர்மரே! நீரே அக்கடிதத்தைப்படியும் (க்ருரவர்மன் கடிதத்தைப்படித்தல்)

உதயபுரி.

கூர்ஜரதேசத்து அரசர் பாஸ்கர விஜயருக்கு உதயபுரி அரசனும், பழிக்குப்பழி வாங்குபவனுமாகிய ஜயசீலன் எழுதிய போர்க்கடிதம். நீர் என்னுடைய வலுவைக்கண்டு அஞ்சி, என்னுடன் உறவாட நினைத்ததை நினைக்க எனக்கே மிகவும் வியப்பைத் தருகின்றது. வீரமிருந்தால் போரில் நின்று என் புதல்வியை வெல்லலாம்.

ஜயசீலன்.

வீ. ஸி. ஹா! என் தந்தையை அவமதித்த அவ்வற்பனை நான் சும்மா விடேன். சந்திரஹாஸா! புறப்படு உடனே.

ச. ஹா. இளவரசே! பொறும்.

கு. வ. ராஜகுமாரா! அவ்வரசன் என்னிடம் நடந்துகொண்ட விதத்தைச் சொல்லுகின்றேன் கேளுங்கள். யான் நமது அரசரால் அளிக்கப்பட்ட தம்முடைய படத்தை அவன் கையில் கொடுத்தவுடன் அவனுக்கு வந்த கோபத்திற்கு அளவேயில்லை. தன் புதல்விக்கு எதிரிலேயே, தமது படத்தைக் கீழே எறிந்து தன் காலால் மிதித்து, என்னையும் அவமானம் செய்து அனுப்பினான்.

வீ. ஸி. தந்தையே! இனி நான் பொறுக்கமாட்டேன். அச்சண்டாளன் என்னையுமா அவமானம் செய்தான். இதோ அவன் போர் வீரனை முதல்பலி கொடுக்கின்றேன். (தன் வாளைஉறுவி, வீரநாதனை கொல்லப்போக சந்திரஹாஸன் தடுக்கின்றான்.)

ச. ஹா. நண்பா! பொறு. தூதாக வந்தவர்களைக் கொல்லலாமா? யுத்தசாஸ்திரத்தை நன்கறிந்த நீயே இப்படிச்செய்தால், மற்றவர்கள் ...........

வீ. ஸி. சந்திரஹாசா! ஒன்றும் அறியாதவன்போல் பேசுகின்றனையே அவ்வற்பன் என் தந்தையையும், என்னையும் இகழ்ந்து பேசினனே. இருக்கட்டும் அவ்வற்ப வீரனின் வலிமையைச் சிதைக்கின்றேன் சீக்கிரம்.

பா. வி. அப்பொழுதே நினைத்தேன். அவன் இன்னும் என்மீது குரோதம் கொண்டிருக்கின்றான். வீரஸிம்ஹா! ஜயசீலன் புதல்வியை நீ மணம் செய்துகொள்ள வேண்டுமென்று உன் அன்னை எண்ணினாள். அவள் எண்ணத்திற்குப் பங்கம்வராமல் உடனே யுத்தத்திற்குச் சென்று அவனைக்கொண்டு வரவேண்டும். யான் தற்சமயம் யுத்தத்திற்குவர இயலாது. ஏனெனில் இந்த ஐந்து ஆறு தினங்களாக, சில சமயங்களில் என்னை அறியாமலேயே, திடீரென மயக்கம் உண்டாகிறது. அடிக்கடி மனம் தளர்ச்சி அடைந்து வருகின்றது.

இ. ஸே அண்ணா! தாங்கள் அதற்காக வருந்தவேண்டாம். தங்கள் உடம்பு, கூடிய சீக்கிரம் சௌகரியமாய் விடும். அதற்குள்ளாக, யானும் வீரஸிம்ஹனும் யுத்தத்திற்குச் சென்று அவனை வென்று அப்பெண்ணைக்கவர்ந்து வருகின்றோம். அந்த ஜயசீலன் முன்பு சிந்துதேசத்தை வென்று விட்டோமென இறுமாப்பினால் இந்த கூர்ஜரத்தையும் பிடிக்கலாமென எண்ணினன்போலும். இருக்கட்டும். இந்த யுத்தத்தில் சரியான புத்தி கற்பிக்கின்றேன்.

பா. வி. தூதுவரே! எமது படை யுத்தத்திற்கு இன்று இரவே புறப்படுவதாக உமது அரசரிடம் தெரிவிப்பீர்.

வீ. நா. உத்திரவு—(செல்லல்)

பா. வி. சபையோர்காள்! நான் இப்பொழுது கூறப்போகும் விஷயங்களைச் செவ்வனே கேட்டு நடத்தல் வேண்டும். வீரர்களே! நீங்கள், மற்ற வீரர்களை உடனே திரட்டிக்கொண்டு ஜயசீலனை எதிர்க்க முன்வரவேண்டும். வீரஸிம்ஹன் வீரர்கள் படைக்கும், சந்திரஹாஸன் குதிரைப் படை, யானைப்படை இவைகளுக்கும் தலைவராயிருத்தல்வேண்டும். என் சகோதரன் இந்திரஸேனன், யுத்ததளகர்த்தனாக இருக்கட்டும். க்ஷத்ரிய வீரர்களே! உங்கள் அபிப்பிராயமென்ன?

சபை. அப்படியே மகாராஜ்!

வீ. ஸி. (உறுவியவாளுடன் முன்வந்து) வீரர்களே! உறுவுங்கள் வாளை. நடவுங்கள் சத்தியத்துடன். பவானீ தேவி நம்மைக் காப்பாளாக.

(யாவரும் வாளை உறுவிக்கொண்டு)

சபை. பவானிமாதாவுக்கு ஜே! ஜே!! ஜே!! (யாவரும் நிஷ்கிரமம்)

(காக்ஷி முடிகிறது.)

## அங்கம் 2.—காக்ஷி 2.

இடம்:-யுத்தகளம்.

*சில வீரர்கள் உலாவிக்கொண்டிருக்கின்றனர். ஜயசீலன், வீரநாதன் மற்ற வீரர்கள் சம்பாஷித்துக் கொண்டிருத்தல்.*

வீ. நா. அரசே! இப்பொழுது நடந்துவரும் இந்தப் பத்து நாள் யுத்தத்தில், நமது வீரர்கள் பாதிக்குமேல் உயிர் துறந்தனர். கூலிக்காகச் சண்டைசெய்யவந்த வீரர்களோ இனி பணம் அளித்தால்தான் யுத்தம்செய்வோம் என்று முணுமுணுக்கின்றனர். ஆ! அவ் வீரஸிம்ஹன் தன் காலாட் படைகளை நடத்தும் விதத்தைக்கண்டு, நம் வீரர்கள் அஞ்சி நிற்கின்றனர். அவன்தான் தன் படைகளை இப்படி நடத்துகின்றுன் என்றுலோ அவன் நண்பன் சந்திரஹாஸன், தன் குதிரைப்படை வீரர்களையும், யானைப்படை வீரர்களையும் ஆட்டிவைப்பதைக் கண்டு, நம்முடைய குதிரைகளும் யானைகளும் வெறுண்டு சின்னபின்னமாய் ஓடி ஒளிகின்றன. இந்திரஸேனர் வார்த்தையை நம்பி இனியும் வீரஸிம்ஹனை எதிர்த்துக் கொண்டிருந்தால், நாமும் வீரஸிம்ஹன் வாளுக்கு இரையாக வேண்டியதுதான். ஆதலால் தீரயோசித்து இனியாகவேண்டிய காரியத்தைச் செய்யவேண்டும்.

ஜ. சீ. வீரநாதா! பதறுத காரியம் சிதறாது. நீயேன் அவசரப்படுகின்றாய். இந்திரஸேனர்தான் இன்றிரவு இங்கு வருவதாக ஒற்றர்கள் மூலமாகத் தெரிவித்திருக்கின்றாரே. பொறு. அவர் வரும் வேளையாயிற்று. அவர் வந்தவுடன் இனி செய்யவேண்டியதைப்பற்றி அவருடன் கலந்து யோசிக்கலாம். வீரநாதா! அதோ. பார் யாரோ! ஒரு தாடி வருகின்றது. வீரர்களே! அக்கிழத்தை இங்கு பிடித்துவாருங்கள். (வீரர்கள் கிழவேஷம் தரித்துவந்த இந்திரஸேனனை பிடித்து வருதல்.)

வீ. நா. மகராஜ்! இவருடைய பார்வையைக்கவனித்தால் யாரோ ஒரு ஒற்றன்போல் தோன்றுகிறது.

ஜ. சீ. ஆம், வீரர்காள்! பிடித்துக்கட்டுங்கள் இவனை.

இ. ஸே. (தன் வேஷத்தைக் கலைத்துவிட்டு) ஜயசீலரே! என்னை இன்னாரென்று அறிந்து கொள்ள முடியாதபடி யான் மாறுவேடமணிந்ததை நினைக்க நினைக்க எனக்கு மிகவும் வியப்பைத் தருகின்றது.

ஜ. சீ. இந்திரஸேனரே! அரசே! என் செய்கைக்கு மன்னிக்க வேண்டும். நண்பரே! இந்தவிதமாக இந்நள்ளிரவில் தாம் இங்குவருவீர்கள் என்று நான் கனவிலும் கருதவில்லை. அரசே! எங்களுடைய வீரர்களெல்லாம் மனத்தளர்ச்சி யடைந்துவிட்டனர். இன்னும் இரண்டொரு தினத்தில் அவர்கள் யாவரும் நகருக்குத் திரும்பிவிடுவர் என்றே நினைக்கின்றேன். கூலிக்காகச் சண்டையிட வந்த வீரர்களெல்லாம் பணம், பணம் என்று கேட்க ஆரம்பிக்கின்றனர். தாங்கள் அனுப்பிய பொருளுடன் எங்களிடத்திலுள்ள பொருள்களும் செலவாகிவிட்டன. இவ்வளவு பொருள் விரையமாகியும் வீரஸிம்ஹன் இன்னும் மகா புஜபல பராக்ரம சாலியாய் விளங்குகின்றான். இனி என்ன செய்வது என்று எனக்கு ஒன்றுமே புலப்படவில்லை. இத்தருணத்தில் தாங்கள் இங்குவந்தது எனக்குத் தைரியத்தை அளிக்கின்றது.

இ. ஸே. ஜயசீலரே. இனி நீர் கவலைப்படவேண்டாம். இன்றோடு உம்முடைய கஷ்டங்கள் நீங்கிவிட்டன.

ஜ. சீ. தாங்கள் கூறுவது எனக்கு மிகவும் வியப்பைத் தருகின்றதே. என்ன! வீரஸிம்ஹன் இறந்துவிட்டானோ?

இ. ஸே. அவசரப்படாதீர். இவ்விடத்தில் நம்பிக்கையான உம்முடைய வீரர்கள் எத்தனைபேர்கள் இருக்கின்றனர்?

ஜ. சீ. இங்கு நிற்கும் வீரர்கள் யாவரையும் நம்பலாம்.

இ. ஸே. ஜயசீலரே! வீரஸிம்ஹன் தற்சமயம் என்னுடைய பாசறையில் உறங்குகின்றான். நான் அவனுக்கு மயக்க மருந்தை அளித்த பின்னரே இவ்விடம் வந்தேன். இப்பொழுது என்னுடன் சில வீரர்களை யனுப்பினால் வீரஸிம்ஹனை ஒருவருமறியா வண்ணம் இங்கு எடுத்து வரலாம்.

ஜ. சீ. ஆ! நண்பரே! உமக்குயான் என்ன கைம்மாறு அளிக்கப்போகின்றேன். வீரர்களே! ஜாக்கிரதையாக இவருடன் சென்று வீரஸிம்ஹனைத் தூக்கி வாருங்கள்.

இ. ஸே. (வீரர்களைப் பார்த்து) வீரர்களே! நீங்கள் வீரஸிம்ஹனைத் தூக்கி வருவதற்கு முன், என் கை கால் இவைகளைக் கட்டி, என் பாசறைக்கு வெளியில்போட்டுச் சென்றுவிடுங்கள். பிறகு ஆகவேண்டியதை யான் பார்த்துக் கொள்கின்றேன். ஜயசீலரே! வீரஸிம்ஹன் விஷயமாக, உமக்குப் பின்னர் சமாசாரம் சொல்லியனுப்புகின்றேன். அது வரையில் அவனை பத்திரமாக சிறையில் வைத்திருங்கள்.

ஜ. சீ. அப்படியே.

இ. ஸே. வீரர்களே! என் பின்பு வாருங்கள் நீங்கள் நடக்கும் சப்தம் ஒருவருக்கும் கேட்கக்கூடாது. ஜயசீலரே! இன்னும் சில நிமிடத்தில் உமது விரோதி உம்மிடம் வருவான். ஜாக்கிரதை உடனே நாட்டிற்குத் திரும்பிவிடும்.

(வீரர்களுடன் இந்திரஸேனன் செல்லல்)

ஜ. சீ. வீரநாதா! என் பொருட்டு இந்திரஸேனர் எவ்வளவு பாடுபடுகின்றார். நான் அவருக்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டும். இன்னும் சிறிது பொழுதில் என் விரோதியின் மகன் இவ்விடத்திற்குக் கொண்டுவரப் படுவான். அவனை உடனே நம் நகருக்குக் கொண்டு போய்ச் சிறையிலிட்டுப் பின் இஷ்டப்படிசெய்து கொள்வோம்.

வீ. நா. மகாராஜ்! இந்திரஸேனர் இச்சமயம் வந்து உதவிபுரிந்ததனால் அன்றோ நமக்கு இவ்வளவு தைரியம் வந்தது. இல்லாவிடில் நம்மிடம் தற்சமயம் வேலைக்கு வந்திருக்கும் யுத்தவீரர்கள் யாவரும் தம்முடைய நகருக்கு இன்னும் இரண்டொரு தினத்தில் போய்விடவே எண்ணியிருந்தார்கள். அவர்கள் அவ்விதம் செய்தால் நமது உயிருக்கே ஆபத்தாய் முடியும். நமது அதிர்ஷ்டமே இன்று இந்திரஸேனரை, இங்கு அழைத்து வந்தது.

ஜ. சீ.' தடையென்ன! அதனால்தான் அவர் கூர்ஜர தேசத்திற்கு அரசனாயும், என் மருமகனாகவும் வர யான் இவ்வளவு கஷ்டப்படுகின்றேன். ஆ! வீரஸிம்ஹா! நீ இருக்கும் இடமே தெரியாமல் செய்து விடுகின்றேன்.

வீ. நா. அரசே, அரசே! அதோ பாரும். நமது வீரர்கள் அவனைத் தூக்கி வருகின்றனர். சண்டாளன் வரட்டும். (வீரர்கள் ஸ்மரணையற்ற வீரஸிம்ஹனைக் கீழே வைத்ததும், தன் உடைவாளை உருவிக்கொண்டு) அடே, மடையா! தூதுவனாக உன் தந்தையிடம்வந்த என்னைக்கொல்ல எத்தனித்தனையே! இப்பொழுதே உன்னை எமனுலகுக்கேற்றுகின்றேன் பார்.

ஜ. சீ. (வீரநாதனைத் தடுத்து) வீரநாதா! நீமிகவும்கெட்டிக்காரன். சுத்தவீரன். இவனை இப்பொழுது ஒன்றும் செய்யவேண்டாம். நமது நகருக்கு எடுத்துச்சென்று வேண்டிய சித்திரவதைகள் செய்யலாம். அதுவரையில் பொறுத்திரு. வீரர்களே! இவனை எடுத்துச்சென்று ஓர் புரவியின்மீது வைத்துக்கட்டுங்கள். இப்பொழுதே நமது சைன்னியங்களுடன் நம் நகருக்குச் செல்லலாம். (வீரர்கள் வீரஸிம்ஹனை எடுத்துச்செல்லல்) வீரநாதா! நம்முடைய சேனைகளை இப்பொழுதே ஒருவருமறியா வண்ணம், நமது நகரத்திற்கு புறப்படும்படி கட்டளையிட்டு சீக்கிரமாக வந்துசேர். நான் சில மெய்க்காப்பாளரோடு, வீரஸிம்ஹனைக்கொண்டு செல்கின்றேன். காலதாமதம் செய்ய இதுசமயமல்ல. சென்றுவருகின்றேன்.(செல்லல்.)

(காக்ஷி முடிகிறது)

## அங்கம். 2.—காக்ஷி 3.

---

இடம் :-இந்திரஸேனனின் யுத்தப்பாசறை.

(சில வீரர்கள் உறங்கிக்கொண்டிருக்க வஞ்சகனுன் இந்திரஸேனன் தன் கட்டுகளை அவிழ்க்கும்படி கூக்குரல் இடுகின்ருன்)

**இ. ஸே.** அடே! மடையர்களே. நான் எவ்வளவு நேரம் இவ் விதமாகக் கூக்குரலிடுகின்றது. சீக்கிரமாக வாருங்கள் (வீரர்கள் எழுந்து ஓடிவந்து கட்டுகளை பயத்துடன் அவிழ்த்து விடுகின்றனர்.) சி! நீங்களும் வீரர்கள் என்று வெட்க மில்லாமல் வாள் ஏந்தி நிற்கின்றீர்களே. ஹா! வீரஸிம் ஹா! இப்படியா உன் தலையில் எழுதவேண்டும். (இன்னும் சில வீரர் அவ்விடத்திற்கு ஓடிவருதல்) ஐயோ! நீ யுத்தத்திற்குவரவேண்டாமென்று எவ்வளவு எடுத்துக் கூறியும் அவைகளையெல்லாம் நிராகரித்துவிட்டனையே ஐயோ! என்னை இக்கதிக்குள்ளாக்கிய அக்கொலைகாரர் கள் உன்னை என்னபாடு படுத்துகிருர்களோ! தெய்வ மே! யுத்தகளத்தையே இதுவரையினும் பார்த்திராத சிறுவனை அழைத்துவந்ததற்கோ எனக்கு இத்தண்டனை விதித்தீர். 'ஐயோ! பெற்ற வயிறு எரியுமே. என் மதனியாரும் என் தமையனும் இச்சமாசாரத்தை அறிந்தால் அவர்கள் மனம் என்ன பாடுபடும். (சந்திர ஹாஸன் ஓடிவருதல்) ஐயோ! நான் அவர்களை எவ்வாறு தேற்றுவேன்.

**ச. ஹா.** அரசே! இது என்ன கோலம். ஒன்றும் புரியவில்லை யே. தங்களுக்கு என்ன நேர்ந்தது. சீக்கிரமாகத் தெரிவியுங்கள்.

**இ. ஸே.** ஹா! சந்திரஹாஸா! ஜயசீலன் மகாகர்வம் படைத்த வன் என்றும், அவனோடு யுத்தம் செய்ய வேண்டா மென்றும் எவ்வளவோ, என் அண்ணனிடம் எடுத்துக் கூறினேனே. எரியும் நெருப்பில் எண்ணெயை வார்ப் பதேபோல், ஏற்கனவே வியாதியால் பீடிக்கப்பட்டிருக் கும், என் இன்னுயிர் அண்ணனுக்கு வீரஸிம்ஹனைப்பற் றிய துக்ககரமான செய்தியை எவ்வாறு தெரிவிப்பேன். சந்திரஹாஸா! இவ்வளவுநாள் பிரியாமலிருந்த உன் நண்பனைப் பிரிந்தனையே.

ச. ஹா. அரசே! என்நண்பனுக்கு என்னநேர்ந்தது? நேற்று இரவு, உம்மிடம் வருவதாக என்னிடம் தெரிவித்துவந்தனரே. விரோதிகள் கையில் அகப்பட்டுக்கொண்டனரோ? இப்பொழுதே செல்கின்றேன் அப்படைக்குள். யுத்தகளத்தையே இரத்தகளமாக்குகின்றேன். வீரர்களே! உயிருக்குத் துணிந்தவர்கள் என்னுடன் வரலாம். பேடிகள் பின் தங்குங்கள். நமது உயிரை, நம்மரசரின் பொருட்டு விடுவோம் (வாளை உறுவிப் புறப்படும் சமயம் ஓர் ஒற்றன் பிரவேசிக்கின்றான்.)

ஒற்ற. மகாராஜ்! எதிரிகளின்படை ஒன்றுமே காணப்படவில்லை. யாவரும் ஓடிவிட்டனர்.

ச. ஹா. ஹா! நண்பா! எனதன்பா!

இ. ஸே. அப்பொழுதே எண்ணினேன். வீரர்களே! நாம் வீரஸிம்ஹனை இழந்தோம். ஐயோ! யாவரும் யுத்தகளைப் பினால் உறங்கிக்கொண்டிருந்தசமயம், என் மண்டையில் அடித்து, என் வாயில் துணியை வைத்து அடைத்ததுமன்றி கைகால்களைக் கட்டி வெளியில் போட்டுச்சென்றனரே. அத்தகைய பாதகர்கள் என் அருமை வீரஸிம்ஹனை என்னென்னபாடு படுத்துவார்களோ.

ச. ஹா. அரசே! என் நண்பனைத் தூக்கிச்சென்றதைத் தாங்கள் அறிவீர்களோ?

இ. ஸே. அவ்விஷயம் எனக்கு ஒன்றும் தெரியாது. என்னை அடித்துக்கட்டி பேசமுடியாமல்செய்து இதோ இவ்விடத்தில் (அவ்விடத்தில் ஓர் கடிதம்கிடக்க சந்திரஹாஸன் எடுக்கின்றான்)

ச. ஹா. அரசே! இது என்ன இவ்விடத்தில் ஓர் கடிதம் இருக்கின்றதே. (படித்தல்) ஆ நண்பா! நண்பா! உனக்கு வந்த ஆபத்தையான் அறிந்தும் தற்சமயம் உனக்குயான் உதவிசெய்ய சக்தியற்றவனாய் இருக்கின்றேனே.

இ. ஸே. சந்திரஹாஸா! அக்கடிதத்தில் என்ன எழுதியிருக்கின்றது.

ச. ஹா. (படித்தல்) "வீரஸிம்ஹன் எங்கள் கைதியாகிவிட்டான். மீண்டும் நம் நாட்டின்மீது படையெடுத்தால் அவன் உயிர்துறப்பான்" ஜயசீலன்.

இ. ஸே. அவ்வஞ்சகன் இப்படியா எழுதியிருக்கின்றான்? கொலைக்கும் அஞ்சாக் கொடுங்கோல் அரசனாயிற்றே அவன். வீரஸிம்ஹஹனை இனி எப்படி மீட்பது? எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே.

(கூர்ஜர தேசத்திலிருந்து ஓர் தூதன் ஓடிவருதல்)

தூத. மகராஜ்! நமது அரசர் தம்பினைவின்றிக்கஷ்டப்படுகின்றார் நமது அரண்மனை வைத்தியர்கள் எல்லோரும்கைவிட்டு விட்டனர். மகாராஜர் இறப்பதற்குமுன், இளவரசர், அவரைப் பார்ப்பது நலமென்றெண்ணி, அவரை உடனே அழைத்துவரும்படி ராணி இராஜேஸ்வரி தேவியார் தெரிவித்தார்கள்.

இ. ஸே. ஹா! "பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்பது உண்மையாயிற்றே. என்ன அநியாயம். சண்டாளன் நான் இன்னும் உயிருடன் இருக்கின்றேனே. அண்ணா! தங்களைவந்து காணும் வரையிலாவது உயிருடனிருக்கவேண்டும். வீரர்களே! சீக்கிரமாகப் புறப்படுங்கள். நம்நகரத்திற்குச் சென்றபின் மற்ற விஷயங்களைக் கவனிக்கலாம் அண்ணா! அண்ணா!!

(யாவரும் செல்ல சந்திரஹாஸன் யோசனையுடன் நிற்கின்றான்)

ச. ஹா. இவ்விடத்தில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கவேண்டுமென்பதிற்சையமில்லை. யாரோ ஒருஉளவாளி நம்மிடமிருந்தே இவ்விதம் செய்திருக்கவேண்டும். இல்லையேல், விரோதிகள், வீரஸிம்ஹஹன் தன் சிறிய தந்தையிடம் வந்தசமயம் பார்த்து, அவனைத் தூக்கிச்சென்றிருப்பார்களா? இவ்விஷயங்களை யோசிக்குங்கால், ஒருவன்மீது சந்தேகத்திற்கன்றோ இடமுண்டாகின்றது. என் நண்பனைத் தூக்கிச் சென்றவர்கள் இந்திரஸேனரை ஏன் தூக்கிச் செல்லவில்லை! இவ்விடத்தில்தான் விஷயம் புலப்படவில்லை. ஹா! என் நண்பன் குடும்பத்திற்கே பெரும் கஷ்டகாலம் உண்டாகி விட்டதே. தூதுவன் கூறியதை யோசித்தால், நம் அரசர் இறந்துவிடுவார் எனவே தோன்றுகிறது. அத்தகைய துக்க சமாசாரம் நம் காதில் விழுவதற்கு முன்னர், நாம் இவ்விடத்தைவிட்டுச் சென்று, என் நண்பனைத்தேடி, அவரைக்காப்பாற்றுவோம் அப்படி முடியாவிட்டால் இவ்வற்ப உயிரையும் அவர் பொருட்டு விடச்சித்தமாகயிருக்கின்றேன். கூர்

ஜரதேசத்தைக்காப்பாற்றிவரும் வீரலக்ஷ்மியே! உனக்கு வந்தனம். என் நண்பனின்றி, இந்நாட்டில் யான் நுழைவதில்லை. இது சத்தியம். (செல்லல்)

(காக்ஷி முடிகிறது)

## அங்கம் 2.—காக்ஷி 4.

இடம்:—ஸ்ரீஜரதேசத்தின் ராஜவீதி.

ஸ்ரீ. சா. (ஓர் கையில் தாழங்குடையும், மற்றொரு கையில் விசிறி, தர்ப்பைப்புல் சுற்றிய சுருள், ஸ்தாலிச்செம்பு இவைகளை எடுத்துக்கொண்டும், வேஷ்டியை முழங்காலுக்குமேல் தூக்கிக்கட்டிக்கொண்டும், வேர்க்க விருவிருக்க வேகமாகவர ஸ்தாலிச்செம்பு விழுந்து ஜலமெல்லாம் கொட்டிவிடுகின்றது.) இதென்னடா தர்மசங்கடமாய் இருக்கின்றது! வீட்டைவிட்டுக் கிளம்பும்போதே அபசகுனமா? ஏதுரா! காலைவேளையில் பிராமணன் ஒருவன் வருகின்றானே. ஓதுங்குவோம் என்கிற மரியாதையே போய்விட்டதே. அமங்கலியாப்போன எழவெல்லாம் வெளியில் கிளம்பி பிராணனை வாங்கிவிடுகின்றதே. கர்மம்! (கீழே விழுந்த ஸ்தாலியை எடுத்துக்கொள்கின்றார்) அவளிடத்தில் பிசகில்லேன்னு. எல்லாம் இந்தக் கலிகாலக் கூத்து. சீ! நாம் ஏன் இதைச்சொல்லி வீண் பொல்லாப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். வந்தவேலையை நாம் பார்த்துக்கொண்டு செல்வோம். இன்று வீரஸிம்ஹனும் இந்திரஸேனரும் யுத்தகளத்திலிருந்து திரும்பிவருவதாகக் கேள்விப்பட்டவுடன், ஏதாவது தக்ஷிணைக்குவழிகிடைக்கும் என்று எண்ணி அரண்மனைக்குப் புறப்பட்டேன். புறப்பட்ட இடத்திலிருந்தே அபசகுனமாகின்றதே. இதென்ன கஷ்டமாகயிருக்கின்றது. சரி எதுவரினும் வரட்டும் செல்வோம். இன்றைதினம் நகர் ஏன் இன்னும் அலங்கரிக்கப்படவில்லை. என்ன விசேஷம்! சரி அரண்மனைக்குச் செல்வோம். அங்கு போனால் இதன்

உண்மை விளங்கும். (செல்ல எதிரே அரண்மனே செவிட்டு தீக்ஷதர் முகத்தில் துணியை மூடியவண்ணம் அழுதுகொண்டே வருகின்றனர்.) அட நாராயண! ஒத்தைப் பிராமணன் முகத்தில்துணியைப்போட்டுக்கொண்டு அழுதுகொண்டு வருகின்ருறே. (வந்துகொண்டிருக்கும் தீக்ஷதர் இவரைக் கவனிக்காது இவரைத் தாண்டிச்செல்லுகின்ருர்) அடடா! வைத்திஞத தீக்ஷதர்வாளின்ஞ! (கையைத்தட்டி) ஓய் தீக்ஷதரே! தீக்ஷதர்வாளுக்குன்ஞ! இந்த எழவுக்கு காதுவேறே கேட்காது.(வேகமாக தீக்ஷதர் அருகில்சென்று) வைத்திஞத தீக்ஷதரே! நான் கூப்பிட்டது காதில் விழ வில்லேயா என்ன? இப்படி உம்முடைய காது அநியாய மாய்க் கெட்டுப்போய் விட்டதே!

வை. தீ. என்ன செய்வது. நாம் கொடுத்துவைத்தது அவ்வளவு தான். பகவான் செயலே யார் மாற்றமுடியும்.

சு. சா. அது கிடக்கட்டும், ராஜகுமாரர் எப்பொழுது வருவார்.

வை. தீ. விடியற்காலம் நாலுமணி சுமாருக்கு.

சு. சா. அடடா ராஜகுமாரர் வந்துவிட்டனரா. அப்படியாயின் ப்ராமணுளுக்கு எல்லாம் கொடுத்தாய்விட்டதா?

வை. தீ. இன்னும் இல்லே. கிரியை ஆரம்பமாகும் போதுதான் கொடுப்பார்கள்.

சு. சா. நீ! நாசமாய்போக. (இரைந்து) கிரியையா—என்னஎழவு உளறுகிறீர்–யாருக்கு?

வை. தீ. ஏன்! இவ்வளவுநேரம் சொன்னது காதில்விழவில்லேயோ நமது மகாராஜா பாஸ்கரவிஜயருக்கு—

சு. சா. அடடா–பாவம். தரும பிரபு இறந்தனரா. கஷ்டம். இராஜேஸ்வரியின் மாங்கல்யம்இப்படியாபோகவேண்டும். (உரக்க) தீக்ஷதரே! அரசர் எப்பொழுது இறந்தார்?

வை. தீ. நேற்று சாயந்திரம் இந்திரஸேனர் யுத்தகளத்திலிருந்து திரும்பிவந்து, ராஜகுமாரன் வீரஸிம்ஹனே எதிரிகள் பிடித்துக் கொண்டார்கள் என்ற வார்த்தையைக் கேட்ட வுடனேயே, தன் நினைவை முற்றிலுமிழந்தனர். பிறகு

விடியற்காலம் நான்குமணி சுமாருக்கு இம்மண்ணுலகை விட்டுப் பிரிந்தனர்.

சு. சா. ஏன் நமது அரண்மனை வைத்தியர் வைகுண்டம் பிள்ளை இல்லையோ ?

வை. தீ. அவர் மாத்திரமா. ஆயுர்வேத வைத்தியர்கள் என்ன, யூனானி வைத்தியர்கள் என்ன, மந்திரவாதிகள் என்ன, யாவரும் அவ்விடத்திலிருந்து தம், தம் சாமர்த்திய மெல்லாம் கொட்டி விட்டார்கள்.

சு. சா. மகா பக்திமான். அதிபுண்யசாலி. எத்தனை சத்திரங்கள், பள்ளிக்கூடங்கள், ப்ராமணவேத மந்திரசாலைகள் இவ ரால் உண்டாக்கப்பட்டன. ஆஹா ! வீரஸிம்ஹன் கதி இப்படியா ஆகவேண்டும். தீக்ஷதரே! இனி ராஜ்யவிவ காரங்களைக் கவனிப்பது இந்திரஸேனர்தானே ?

வை. தீ. ஆமாம். பின் யார் கவனிப்பார்கள். எல்லாம் அவர்தான்

சு. சா ஆமாம். விரோதியின் கையிலகப்பட்ட வீரஸிம்ஹனின் கதி என்னஆவது ? இனி இந்திரஸேனர் நாளில் ராஜ்யம் உருப்பட்டுப்போம். நமக்கேன் இந்தவம்பு. நடக்கிறது நடக்கட்டும்.

வை. தீ. சுப்பா! நாழியாகின்றது. இனி ஆகவேண்டியகாரியங்களை நான் போய்த்தான் பார்க்கவேண்டும். போய் வருகின் றேன்.

சு. சா. நானும் இன்று அரண்மனைக்கு வரட்டுமா ? என்னையும் ஏதாவது ஒரு தானத்திற்கு.........

வை. தீ. அவசியமாக வாரும். அரண்மனைக்கு நீர் முன்னால் போம். நான் போய் மற்றை ஏற்பாடுகளையும் செய்து விட்டு, இன்னும் பிராமணர்களை அழைத்துவருகின்றேன்.

(செல்லல்)

சு. சா. ஆகா ! என்ன பரிதாபம். மகாராணியார் மனம்என்னபாடு படும். தன் அருமைமக்காதலனைப் பிரிந்ததுமின்றி தன் மைந்தனையும் பிரிந்த அவ்வுத்தமியின் வயிறு எரியுமே. வரும் விதி வந்துதானே தீரும். நாமொன்று நினைக்கத்

தெய்வமொன்று நினைக்குமென்பதே போல், வீரஸிம்ஹனை எதிர்கொண்டு அழைத்துவரலாமென இப்புது உடைகளுடன் புறப்பட, இக்கோலங்களை யெல்லாம் கேட்கவும் பார்க்கவும் நேரிட்டதே! நல்லது, இப்புது உடைகளுடன் அரண்மனைக்குச் செல்வோமானால் இவைகளை நனைக்கவேண்டும். ஆதலால் ஆத்துக்குப்போய் வேறு ஏதாவது ஒரு பழசைக்கட்டிக்கொண்டு, ஆம்படையாளிடமும் சொல்லிவிட்டுச் செல்வோம். (செல்லல்)

(காக்ஷி முடிகிறது.)

## அங்கம் 3.—காக்ஷி 1.

இடம்:—உதயபுரியின் அரண்மனை அந்தப்புரம்.

(விஜயாள் படுக்கையில் சாய்ந்தவண்ணம் வீரஸிம்ஹனின் படத்தைப்பார்த்துக்கொண்டு பெருமூச்சுவிடுகிறாள். பத்மாக்ஷி பின்புறம் மெதுவாகவந்து படத்தைக் கூர்ந்து கவனிக்கிறாள்.)

பத். விஜயா! ஏது அந்த ராஜகுமாரனின் படத்தை கீழேயே வைக்கமாட்டாய் போலிருக்கிறதே?

விஜ. சீ! போடி. பத்மா! உனக்குஎப்பொழுது பார்த்தாலும் பரியாசம்தான்.

பத். கோபித்துக்கொள்ளாதே! அப்படத்தை நான் ஒருமுறை பார்க்கின்றேன்.

விஜ. சீ! விளையாடாதே! அப்படத்தைத்தான் நீ பார்த்திருக்கின்றாயே. அடிக்கடி வெளியில் எடுத்துப்பார்த்துக் கொண்டிருந்தால், யாராவது பார்த்துவிடுவார்கள். பிறகு என் உயிர்போய் விடும். (ஜயபேரிகையின் சப்தம் கேட்டல்) அடி பத்மா! இது என்ன ஜயபேரிகை. என்ன சமாசாரம்.

பத். அதன் விபரத்தைச் சொல்லுவதற்காகத்தான் வந்தேன் உனது தந்தை, வீரஸிம்ஹனை வென்று கைதியாக்கி வெற்றியுடன் வருகின்றாராம்.

விஜ. ஐயோ ! அப்படியாயின் என் காதலர் மனம் என்னபாடு படும். யான் அவர் உருவத்தைப் பார்த்ததுமுதல், என் ஆவி அவரையே அடைந்துவிட்டது. அவர் இனி என்னை இச்சித்தாலும்இகழ்ந்தாலும், அவரையே தஞ்சமென்றடைவேன். ஆ ! நான் அவரைக்காண வேண்டுமே. என் தந்தையோ அவரை என்னிடம்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர். ஒருக்கால் கொண்டுவாராமலிருந்தால்............

பத். விஜயா ! ஒரு சமயம் வீரஸிம்ஹரை இவ்விடத்திற்கு உன் தந்தை அழைத்துவருவதாக வைத்துக்கொள்வோம். நீயோ அவரை ஒருவருமறியா வண்ணம் நேசிக்கின்றாய். வருபவர் திடீரென எப்படி உன்மேல் காதல் கொள்ளுவர் ? உன்னைக் கொடிய விரோதியின் புதல்வியென்று நினைத்து கண் எடுத்தும் பார்க்கமாட்டாரே. இதற்கென்ன வழி ?

விஜ. என்னவழி செய்வேன் தெரியுமா ? அடி பத்மா ! அவரை எப்படியாவது தப்புவித்து, அதற்குப் பிரதியுபகாரமாக யான் அவரையேகேட்பேன். அப்படித்தந்தால்ஆயிற்று இல்லாவிடில் யான் உயிர்துறப்பேன். ஆ! பத்மா. என்னைப் பிடித்துக்கொள். தலைவலி அதிகமாகின்றது.

(மெதுவாக உட்கார வைக்க ஓர் காவலன் பிரவேசம்.)

காவ. அம்மணி! மகாராஜர், வீரஸிம்ஹனுடன் இவ்விடத்திற்கு வருகின்றார்.

விஜ. யார்! கூர்ஜா தேசத்து இளவரசருடனா! இங்கு எதற்கு வரவேண்டும் ? சரி நீ போய்வா.

காவ. அம்மணி! மன்னிக்க வேண்டும். (செல்லல்)

விஜ. பத்மா! அப்படத்தை இப்படிக் கொடுத்துவிடு, (வாங்கி அதை ஒளித்துக்கொள்ளுகிறாள்) நான் படுத்துறங்குவது போல் இருக்கின்றேன்.

பத். விஜயா! இதோ எல்லோரும் வருகிறுர்கள்.

(ஜயசீலன், வீரஸிம்ஹனைச் சங்கிலிகளால் இணைத்து அழைத்து வருதல். வீரஸிம்ஹர் விஜயாளைப் பார்த்து பிரமித்து நிற்கின்ருன்.)

ஜ. சீ. விஜயா! இதோ பார். (விஜயாள் திடுக்கிட்டு எழுந்தவளைப் போல் எழுந்து, வீரஸிம்ஹனைக்கண்டு நாணமுற்று நிற்கின்ருள். வீரஸிம்ஹனும் புன்முறுவலுற்று, மறுபடியும் கோபத்துடன் நிற்கின்ருன்.) நான் உனக்கு வாக்குக்கொடுத்தபடி இவ்வற்பனை உன்னிடம் உயிருடனேயே கொண்டு வந்திருக்கின்றேன்.

விஜ. இவ்வீரரை, இவ்வளவு எளிதாக எப்படிப் பிடித்துவந்தீர்கள்? உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்!

வீ. ஸி. அழகே உருவாகக்கொண்ட ஹே ராஜகுமாரி! சற்று முன்பாக உன்னையான்கண்டபொழுது, நீயும்இக்கொடிய வஞ்சகனுக்குப் புதல்வியாக உதித்தனையே என்று வருந்தினேன். அப்படி யான்கொண்ட எண்ணம் தவறே என்று இப்பொழுது நினைக்கின்றேன். பெண்மணியே! புஜபல பராக்ரமம் பொருந்திய வீரதீரனுன உன் தந்தை என்னைச்சமரில் எதிர்த்துநின்று வென்று இத்தாளைப் பூட்டினுன் என்றுஎண்ணி சந்தோஷப்படுகின்றனையோ? இல்லை, இல்லை! மேன்மையுற்ற க்ஷத்ரிய குலத்தில் உதித்த இவன், கேவலம் பேடியைப்போல் யான் உறங்கும் சமயம் என் பாசறைக்குவந்து மயக்குவித்து திருட்டுப்பயலைப்போல் என்னைத் தூக்கிவந்தனன். அடே ஜயசீலா! நீயும் ஓர் வீரனு? வெட்கம்! வெட்கம்!! சுத்த வீரனென்று உன்னை இன்னும் எண்ணுவாயாகில் கையில் இப்பொழுதே வாளேந்தி எதிரில் தைரியத்துடன் நின்று யுத்தம்செய் பார்போம். (வாளை உறுவுதல்) ஏன் நிற்கின்ருய்?

ஜ. சீ. அட மடையா! உன் நாவை அடக்கிப்பேசு. நீ என் கைக்குள் அகப்பட்டிருக்கின்ருய் என்பதை மறந்து பேசுகின்ருயோ? காவலர்களே! இவனைக்கொண்டு போய் உடனே சிரச்சேதம் செய்துவிடுங்கள். சீக்கிரம் கொண்டு செல்லுங்கள்.

வி ஜ தந்தையே! இத்தகைய கர்வமுடைய ராஜகுமாராரைத் திடீரென்று கொலைசெய்யாமல், சிறையிலிட்டுச் சித்திர வதை செய்தே பின்பு கொல்லவேண்டும். அப்பொழுது தான் நமது வஞ்சகம் தீரும். ஆ பத்மா! என்னைப் பிடித்துக்கொள். எனக்கு மயக்கமாக இருக்கின்றது.

(ஜயசீலன் தன் புதல்வியைத் தாங்கி நிற்கின்றான்)

வீ. ஸி. இவ்வழகி எதற்காக இப்படிக் கூறுகிறாள். இருக்கட்டும் ஜயசீலா! என்னை வஞ்சனையாகக்கவர்ந்து வந்ததுமன்றி, குரூரமான கொலையும் செய்யவா எண்ணுகின்றாய்? வீண் பாபத்திற்குள்ளாகாதே. நான் இறப்பதற்கு அஞ்சி இவ்வாறு கூறுகின்றேன் என்று நினைக்காதே. என் ஒரு உயிரைக்கொல்வதனால், இன்னும் சில நாளில் உன் நாடெங்கும் இரத்தவெள்ளமாக ஓடுமே என்று தான் வருந்துகின்றேன்.

ஜ. சீ. அடே! காவலர்களே இவனை அழைத்துச்சென்று நமது புதிய காராக்கிரகத்தில் அடையுங்கள். ஜாக்கிரதை என் உத்திரவின்றி இவனை ஒருவரும் காணலாகாது.

(காவலர் வீரஸிம்ஹனை அழைத்துச் செல்லல்

வீ. ஸி. ஜயசீலா! எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உளன் என்பதை மறந்துவிடாதே. (செல்லல்)

ஜ. சீ. இப்பயலுக்குத் தெய்வம் வேறோ?

வி ஜ தந்தையே! வீணாக சப்தம் செய்யவேண்டாம். என் தலைவலி அதிகரிக்கின்றது. இப்பொழுது இருக்கும் நிலைமையிலேயே இன்னும் சில காலமிருப்பேனாயின், நான் கூற்றுவனோடு போகவேண்டியதுதான்.

ஜ. சீ. கண்ணே! நீ கவலைப்படாதே. நான் எவ்வளவோ வைத்தியம் செய்துபார்த்தும் உன் வியாதிக்குத்தகுந்த ஔஷதம் கொடுக்கச் சக்தியுள்ள வைத்தியன் அகப்படவில்லையே. இந்தத் தரும சங்கடத்திற்கு யான் என்ன செய்வேன். ஐயோ! தாயை இழந்த உனக்கும் இவ் விதக் கஷ்டங்கள் நேரிடவேண்டுமா.

வி. ஜ. பிதா! அன்று எழுதிய எழுத்தின்படி நடந்துதானே தீரும். இதற்காக நாம் விசனப்பட்டு முடியுமோ?

ஜ. சீ. குழந்தாய்! நீ வருந்தாதே. உன்னுடைய வியாதியைக் குணப்படுத்துபவர்களுக்கு வேண்டிய பொருள்களும் சன்மானங்களும் கொடுப்பதாகப் பறைசாற்றியதுமன்றி, பலதேசத்துப் பிரதான வைத்தியர்களையும் வரும்படி சொல்லி யனுப்பியிருக்கின்றேன். நீ கவலைப்படாமல் இரு. பத்மாக்ஷி! விஜயாளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். வீரஸிம்ஹனைப் பத்திரமாகச் சிறையிலிட்டனரா என்று நான் கவனித்து வருகின்றேன் (செல்லல்)

ஜ. சீ. (ஜயசீலன் சென்ற சிறிது நேரங்கழித்து) அடி பத்மா! நான் என்ன செய்வேனடி? யான் இதுகாறும் படத்தைப் பார்த்து ஆநந்தித்துக்கொண்டிருந்த என் அழகிய வீரரை இன்று நேரில் காண நேர்ந்தவுடன் என் மனம் அவருடன் சென்றுவிட்டது. ஐயோ! நான் பாதகி. நான் மாத்திரம் இப்பஞ்சணையிற் படுத்துறங்கியும், அறுசுவை உண்டி அருந்தியும் மகிழ, என் காதலர் சிறையில், புழுதியில் படுக்கவும் அற்ப ஆகாரம் புசிக்கவும் என்மனம் பொறுக்குமா? பத்மா! நான் அவரையே கதியென்று எண்ணிவிட்டேன். சத்தியமாக இவ்விஷயத்தை நீ ஒருவரிடமும் தெரிவிக்காதே. சீ! அவர் என்னைக் காதலிக்கின்றாரா என்பதை அறிவதற்கு முன்னரே, நான் அவரை என் சொந்தக் காதலராகப் பாவித்துப் பேசுகின்றேனே. இதை நினைக்க எனக்கே வெட்கமாய் இருக்கின்றது.

பத். விஜயா! அப்படி நீ நினைப்பது தவறாகும். வீரஸிம்ஹர் இங்கு வந்தவுடன் உன்னைப் பார்த்துப் புன்முறுவலுற்றதன் பின்னர் தன் முகத்தை வேறுபக்கம் திருப்பியதை யான் நன்கு கவனித்தேன். மேலும் அவர் உன்னைப் பார்த்தவுடன் "நீயா இக்கொடியவனுக்குப் புதல்வியாக இருக்கவேண்டும்" என்று சொல்லியதே அவரது உளக் குறிப்பை வெளிப்படுத்தியது. இவ்விஷயத்தை ஆழ்ந்து நோக்கின், உன்மீது ஆசையுற்றே அவ்வாறு கூறியிருக்க வேண்டுமென்று நினைக்கின்றேன். விஜயா! ஒன்று சொல்லுகின்றேன். நீ கோபித்துக் கொள்ளாதே?

வி ஜ. என்ன பத்மா—எனக்கென்ன கோபம்.

ப த். ஒன்றுமில்லை---உன்னைப்போல அழகுள்ள மங்கையைக் கண்டால் எந்த ஆடவன்தான் மயங்கான். நான் சத்யம் செய்வேன். வீரஸிம்ஹர் உன்மேல் இச்சை கொண்டிருக்கின்றார்.

வி ஜ. அடி! அவர் என்னைக் காதலித்தாலும், இல்லா விட்டாலும் அவரே என் காதலர். நான் அவரை மனப்பூர்வமாகக் காதலித்துத் தெய்வமாக நினைத்து என் உள்ளத் தாமரையினால் பூஜிக்கின்றேன். பத்மா! எனக்காக நீ ஓர் உதவி செய்யவேண்டும். ஒருவருமறியாவண்ணம் நல்ல ஆகாரம் தினம் சிறைச்சாலைக்குக்கொண்டு போகப் படவேண்டும்.

ப த். அதற்கென்ன! சிறைச்சாலை அதிகாரி என் காதலர் தானே. அவரைச் சரிப்படுத்திக் கொள்கின்றேன்.

வி ஜ. யார்! கருணாஹரனா இப்பொழுது சிறைச்சாலைத் தலைவன்? உன்சகோதரன் சுகுணதீரனன்றோ முன்புஇருந்து வந்தான்.

ப த். அவனுக்கு உடம்பு சௌகரியமில்லாததால் அவன் வேலையை என் காதலரே பார்த்துவருகின்றார்.

வி ஜ. சரி. அப்படியாயின் என் காதலருக்கு நல்ல உணவு அளித்து நீ காப்பாற்றவேண்டும். சமயம் வாய்த்த பொழுது, உணவை நான்அனுப்புவதாக அவரிடம்......

ப த். ஆம்! நீங்கள் அனுப்பியதாகச் சொல்லுகின்றேன்.

வி ஜ. சீச்சீ! அதிகப்பிரசங்கி........அடியம்மா. நீ கோபித்துக்கொள்ளாதே.

ப த். நானா அதிகப்பிரசங்கி! ராஜகுமாரனைக் கண்டவுடன், தலைவலி மயக்கம் எல்லாம் பறந்துவிட்டதோ! பேஷ்! அவரன்றோ உண்மை வைத்தியர். இதன் உண்மை தெரியாமல், நமது அரசர் மிகவும் கஷ்டப்படுகின்றார்.

வி ஜ. சரி, சரி! பத்மா! நற்சுவையுண்டி தினம் தினம் அளிக்க நீ தவறாதே.

ப த். விஜயா! (போய்க்கொண்டே) நல்லிளங்குமரனை தினம் தினம் நினைக்க நீ மறவாதே. (செல்லல்)

(காக்ஷி முடிகிறது.)

## அங்கம். 3.—காக்ஷி 2.

இடம்:-இந்திரஸேனனின் சயனக்கிரஹம்.

(இந்திரஸேனன், தன் இரகசிய அறையில் உறங்கிக்கொண்டிருந்த வண்ணம் கொடிய கனவு காண்கிறான். அச்சமயம் தூரவர்மன் அவ்விடம் வந்து சேருகின்றான்.)

தூ. வ. ஏன் இவ்வாறு சதா புலம்பிக்கொண்டே உறங்குகின்றார்! நாம் எழுப்புவோமா. சீச்சீ! தானாகவே எழுந்திருக்கட்டும்.

இ. ஸே. (கனவில் தன் பிரக்ஞை தவறிப் புலம்புகின்றான்) நான் எது வேண்டுமானாலும் செய்வேன். அவைகள் என்னுடைய இஷ்டம். சீ! அற்பனே! நீ யாரடா என்னைக்கேட்பவன். அண்ணா! தாங்கள் இறப்பதற்குமுன் நீங்கள் தானே இவ்விராஜ்யத்தை எனக்கு அளித்தீர். ஆ! ஏமாந்தனையா! என்னையா ஏமாற்றப் பார்த்தாய்? இப்பொழுது யார் ஏமாந்தது! ஹா! ஹா! ஹா. (சிரித்தல்) அண்ணா! அண்ணா! நான் தான் உம்மைக்கொன்றேன். வீணாக என்னைத் துன்புறுத்தாதீர்கள். ஐயோ! என்னை மன்னியுங்கள். சீச்சீ, மடையனே! நானா உன்னை மன்னிப்புக் கேட்பது? உன்னைத்தான் அப்பொழுதே யமனுலகிற் கனுப்பினேனே! ஏன் என்னை இப்படிப் பயப்படுத்துகின்றாய். (எழுந்து) ஹா, யாரடா நீ! வீரஸிம்ஹனா! அடபயலே! உன் யுத்தப் பயிற்சியை என்னிடம் காட்டவா வந்தாய்? ஹா! இதோ பார் உன் வாள் வீச்சைத்தடுத்து விட்டேன். என்ன சொல்லுகின்றாய். சாமர்த்தியமிருந்தால் என் வாள்வீச்சைத் தடுததுக்கொள் பார்ப்போம். (தன் உடைவாளை எடுத்து ஓர் கல்தூணை வீரஸிம்ஹன் என்று நினைத்துக்குத்த அங்கு

ஒருவருமில்லாததைக்கண்டு பயந்து அலறி மூர்ச்சித்துக் கீழே விழுகின்றான்.)

து. வ. சீ! இனி நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது அழகல்ல. இவ்வஞ்சகன், நமக்குத் தெரியாமலேயே தன் அண்ணனைத் தீர்த்துவிட்டான் என்பதிற் சந்தேகமில்லை. நமக்கேன் இந்த வம்பு. இவன் தன் நாடகத்தை இன்னும் எவ்வளவு காலம் நடிக்கிறான் என்பதைப் பார்ப்போம். (இந்திரஸேனனின் முகத்தில் கொஞ்சம் ஜலத்தைத் தெளித்து விசிறுதல்)

இ. ஸே. (துருவர்மனை வீரஸிம்ஹன் என நினைத்து எழுந்து) அடே! வீரஸிம்ஹா இப்பொழுது என்னிடம் அகப்பட்டுக்கொண்டாய். உன் தந்தையோடுகூட உன்னையும் இப்பொழுது அனுப்பிவிடுகின்றேன். இதோ பார் (கை நடுக்கத்துடன் துருவர்மனைக் குத்தப்போக, அவன் அதைப் பிடுங்கிக்கொள்கிறான்.) ஐயோ! வீரஸிம்ஹா! அப்பா என்னைக் கொல்லாதே. என்னை உயிருடன் விட்டுவிடு. ஆம்! நான் தான் உங்களுக்குஇவ்வளவு இடையூறு விளைவித்தேன்.

து. வ. (இந்திரஸேனனை இறுகப்பிடித்து) அரசே! அரசே! இதென்ன கோலம். நான் தங்கள் நண்பனல்லவா. ஏன் என்னைக்கண்டு இவ்விதம் பிதற்றுகிறீர்கள். நீங்கள் கூறியதை வெளியில் யாராவது கேட்டிருந்தால், நமது இரகசியங்கள் எல்லாம் என்ன ஆகியிருக்கும்.

இ. ஸே. என்ன நானா பிதற்றுகிறேன்? நீ, நீ, வீரஸிம்ஹன்...... துருவர்மனல்லவா! ஆ! என்ன மதியீனம். நண்பா! உன்னை வீரஸிம்ஹன் என்று அல்லவோ முன் நினைத்தேன். சீ! என் மனம் என்ன இப்படி பீதியடைந்தது. சற்றுப்பொறு (மேஜையின்மீதிருக்கும் மதுவைக் குடிக்கின்றான்) நண்பா! நீ எப்பொழுது இங்கு வந்தாய்.

து. வ. ஒரு நாழிகையிருக்கும். அதிருக்கட்டும், நண்பரே! இப்பொழுது தாங்கள் பிதற்றிக் கொண்டிருந்ததை என்னைத்தவிர வேறு யாராகிலும் கவனித்திருந்தால் உம்மைக் கொலைகாரர் என்றே..........

இ. ஸே. என்ன! நானா என் தமையனைக் கொன்றேன். நான் இவ்விஷயத்தைப்பற்றியா பிதற்றினேன்.

து. வ. நானாக ஒன்றும் சொல்லவில்லை. எல்லாம் தங்களுடைய வாக்கிலிருந்தே வந்தது.

இ. ஸே. நண்பா! அவைகளை நீ நம்பாதே. சற்றுமுன்னர் நான் ஒரு கொடிய கனவு கண்டேன். அதன் பயத்தினாலே ஏதாவது பிதற்றியிருப்பேன். நீ இவ்விஷயத்தை ஒருவரிடமும் கூறிவிடாதே. ஜாக்கிரதை! இனிமேல்தான் நாம் ஒழுங்காகவும் ஒற்றுமையாகவும் நடக்கவேண்டும்.

து. வ. அரசே! என்னை அப்படித் தாங்கள்நினைக்கவேண்டாம். நான் தங்களுடைய நண்பன் என்பதை மறந்தீரோ! தங்கள் சகோதரரோ இறந்துவிட்டார். பையனோ சிறையிடப்பட்டான். இனி தாங்கள்தானே அரசர்! இப்பொழுது ஏன் ஜயசீலனைப் பெண் கேட்கலாகாது.

இ. ஸே. நண்பா! வீரஸிம்ஹனைத் தொலைத்துவிடுவேனேயாகில், பிறகு நம் நாட்டுக் குடிகளை வெகு சீக்கிரத்தில் அடக்கிவிடுவேன். பின் இராஜேஸ்வரி பெட்டியில் அகப்பட்ட பாம்பேபோல் அடங்கிவிடுவள். பின்னர் மணத்திற்கு சுலபமாக ஏற்பாடு செய்யலாம்.

து. வ. அடிமரத்தை வெட்டியவனுக்கு கிளையைச் சேதிப்பது, தானா கஷ்டம்? அதுபோல் அரசர் இறந்வுடன் அவர் மைந்தனையும்தீர்த்துவிட்டால் காரியம் நிறைவேறிவிடுகின்றது. இன்றே வீரஸிம்ஹனைத் தீர்த்துவிடும்படி ஜயசீலனுக்கு ஓர் கடிதம் எழுதி என்னிடம் கொடும். நான் மற்றைய காரியங்களைப் பார்த்துக்கொள்கின்றேன்.

இ. ஸே. என்ன மற்றொரு கொலையா! ஆம் செய்யத்தான் வேண்டும். நண்பா! இனித்தான் உன்சாமர்த்தியத்தை வெளிப்படுத்தவேண்டும். நான் ஜயசீலனுக்கு ஒருகடிதம் அளிக்கின்றேன். நீஅதை அவனிடம் எடுத்துச்சென்று சீக்கிரமே காரியத்தை முடித்துவா. (ஒரு கடிதம் எழுதி துநாசர்மன் கையில் கொடுத்து) நண்பா! ஜாக்கிரதை. நீ ஜ சீலனிடம் போய்வருவது ஒருவருக்கும் தெரியலாகா

து. வ. அரசே! தாங்கள்அதைப்பற்றிக் கவலைப்படவேண்டா நான் இவ்விஷயத்தை இனிதே முடித்து வருகின்றே

(கடிதத்துடன் செல்லல்.)

இ. ஸே. இனி! நாம் ஒருவருக்கும் பயப்படவேண்டியதில்லை. வீரஸிம்ஹனைத் தீர்த்தவுடன் இத்தேசத்துக் குடிகளையும், இந்த இராஜேஸ்வரியையும் சிறிது பொழுதில் அடக்கிவிடுவேன். பிறகு நம்மை எதிர்க்கக்கூடியவர்கள் யார்? ஆம், இந்த சந்திரஹாஸன் ஒருவன்இருக்கின்றான். ஆயினும் அவனால் நமக்கு ஒரு தீங்கும் ஏற்படாது. மேலும் அப்பிசாசு, எவ்விடத்திற்கோ ஓடிவிட்டது. (மறுபடியும் குடிக்க, இராஜேஸ்வரி அவ்விடத்திற்கு வருகிறாள்)

இ. ரா. பேஷ்! வெகு அழகாக இருக்கின்றது. ராஜ்யம் உருப்பட்டுப்போகும்.

இ. ஸே. யாரது! (சற்றுநேரம் கழித்து) நீயா! என்ன சமாசாரம்? எங்கு வந்தாய்?

இ. ரா. என்ன! என் கணவர் இறந்தவுடன் எனக்குற்ற மரியாதையும் போய்விட்டதோ. உண்மை. எனக்கு இனி மரியாதை வேறு வேண்டுமா. ஐயோ! என் பிராண நாதர் இறந்ததைக்குறித்து வருந்திக்கொண்டிருப்பது போதாதென்று, ஈசன், என் அருமைப் புதல்வன் வீரஸிம்ஹனையும் விரோதியின் கையில் அகப்படச் செய்து இன்னம் வருத்துகின்றனரே. ஈசா! உமக்கு இரக்கமென்பதே யில்லையா. பேதையாகிய என்னை இவ்வளவு சோதனைக்குள்ளாக்க, பாவியேன் என்ன பாவம் செய்தேனோ. கண்ணே! வீரஸிம்ஹா! ஐயோ பெற்ற வயிறு எரிகின்றதே. நீயேன் என் வயிற்றிலுதித்தாய். பர்த்தாவை விட்டுப் பிரிந்த நான் உன்னையுமா பிரிய வேண்டும். இனி நான் இருந்துஎன்ன, இறந்தென்ன. ஐயா! நீங்கள் மேன்மையுற்ற வீரவம்சத்தில் பிறந்தும், என் குமாரனை இன்னும் மீட்காமல் இருக்கின்றீர்களே? சதா குடித்துக்கொண்டும், ராஜ்ய விவகாரங்களைச் செவ்வனே கவனியாமலும், வீரஸிம்ஹனை மீட்பதற்கு வழி செய்யாமலும் இருப்பதின் நோக்கமென்ன? ஐயோ! என் குமாரன் எவ்வளவுநாள் அப்பாழுஞ் சிறையில் கஷ்டப்படுவான்.

இ. ஸே. அதற்கு யார் என்ன செய்வது. எல்லாம் உன்னால் வந்த கஷ்டந்தான். உன் அழகான புத்திரனுக்கு, ஜயசீலன் புதல்வியை மணம் செய்யாவிட்டால், அவன் நன்கே வாழமாட்டானோ? நான் அப்பொழுது எவ்வள

வோ கூறினேன். ஏழைசொல் அம்பலத்தில் ஏறுமா? ஒன்றும் அறியாதவளைப்போல் பேசுகின்றாயே. இப்பொழுது உனக்கென்ன குறை. உலகில் ஒருவர் பிறப்பதும் இறப்பதும் சகஜமே. ஏதோ என் தமையனார் காலம் முடிந்துவிட்டதனால், அவர் விண்ணுலகை அடைந்தார். அதற்காக நீ வருந்தி என்பயன்? நான்கூடிய சீக்கிரம் வீரஸிம்மனை அழைத்துவர ஏற்பாடு செய்கின்றேன். அதுவரையிலும் வீணாக என்னைக் கண்டபடி தூஷிக்காதே. பிறகு..........தெரியுமா?

**இரா.** ஐயோ! இந்த விதிக்கு யான் என்னசெய்வேன்? புருஷனையிழந்த பாவி, புத்திரனையாவதுபார்த்து மகிழ்வோமென்றால் இவ்வஞ்சகனன்றோ தடையாய் இருக்கின்றான்! ஆ! என் கணவர் இறந்தநாளாக இச்சண்டாளன் என்னை மதிக்காமல் கேவலம் பணிப்பெண்ணிடம்வார்த்தையாடுவதுபோலன்றோ நினைக்கின்றான். ஐயா! என் குழந்தை எப்பொழுது வருவான்? அவனைப் பார்க்க இன்னும் எவ்வளவு நாட்கள் செல்லும்?

**இ. ஸே.** இன்னும் சில நாட்களில் பார்க்கலாம். கவலைப்படாமல் போய்வா. உன்னைவிட அவனிடத்தில் எனக்கு பிரியம் அதிகம் என்பதை மறந்துவிடாதே.

**இரா.** என் புதல்வனைச் சீக்கிரம் கொண்டுசேர்த்தால் உமக்கு மகா புண்ணியமுண்டு. என்மேல் கிருபை வைத்து துரிதமாக அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். (செல்லல்)

**இ. ஸே.** வீரஸிம்ஹனையா! ஆம் அவனை, அவன் தந்தையிடமே சீக்கிரம் அனுப்பிவிடுகின்றேன். அடிமதியிலீ! என்னை முன்பு குடிகாரன், ஸ்திரிலோலன் என்று இகழ்ந்து கூறினாய்! யார் எப்படிக் கூறியபோதிலும் எடுத்த காரியத்தை முடிப்பேன், என்பதை நீ யறியவில்லையே. நேரமாயிற்று இனி, வீரர்களிடம் சென்று அவர்களை நம் வழித்திருப்புவோம்.

(குடிவெறியினால் ஆடிக்கொண்டே செல்லல்)

(காக்ஷி முடிகிறது)

## அங்கம் 3.—காக்ஷி 3.

---

இடம்:—உதயபுரி அரண்மனையின் அந்தப்புரம்.

(விஜயாள் வருத்தத்துடன் யோசித்துக்கொண்டிருக்க, பத்மாக்ஷி அவளுக்குத் தேருதல் கூறிக்கொண்டிருக்கிருள்.)

பத். விஜயா! நீ இப்படி சதா வருந்திக்கொண்டிருந்தால் வெகு சீக்கிரமாக உயிர்துறப்பாய்.

விஜ. பத்மா! யான் என்ன செய்வேன்! என் மனப்பூர்வமாகக் காதலித்த காதலரை என் தந்தை—ஆ! என் தந்தை என்று சொல்லவும் என் நா கூசுகின்றதே. ஐயோ! இவரது பெண்ணாகவா நான் உதிக்கவேண்டும். கஷ்டமென்பதையே அனுபவித்திராத அந்த ராஜகுமாரரைச் சிறையில் அடைத்து வருத்துகின்ருரே.

பத். விஜயா! நீ வருந்தவேண்டாம். உன் அன்பர் சிறையில் ஒரு கஷ்டமும் படவில்லை. நான் முன்பு கூறியபடி, இவ்வொரு வாரமாக நமது அரசருக்குத்தெரியாமல், நல்ல உணவுகளைத் தினந்தோறும் கொண்டுகொடுத்து வருகின்றேன்.

விஜ. அடி பத்மா! நீ செய்துவரும் பேருதவிக்கு யான் என்ன பதில் செய்யப்போகின்றேன்.

பத். விஜயா! உன் நட்பு எப்பொழுதும் இருந்தால் போதுமானது. தெய்வாதீனமாய் இப்பொழுது சிறையைக் காவல் செய்பவரான என் காதலரும், வீரஸிம்ஹனும் மிக்க நட்பு பூண்டதாகச் சில சம்பாஷணைகளிலிருந்து அறிந்தேன். மேலும் என் காதலரும் இவ்விஷயத்தில் எவ்வித உதவியும் செய்வதாகத் தெரிவித்தனர்.

விஜ. அப்படியாயின், என் இரகசியங்களை உன் காதலனிடம் தெரிவித்து விட்டனையோ? என்பாடு இனி அதோகதிதான்.

ப த். விஜயா! நீ அதற்காக வருந்தவேண்டாம். அவரை என்காதல் வலையில் யீடுபடச்செய்த பின்னரே, யான் அவரிடம் உனது விஷயத்தைத்தெரிவித்தேன். அவரும் தக்கசமயத்தில் உதவி புரிவதாக உன்னிடம் தெரிவிக்கச் சொன்னார் என் சகோதரனைப்பற்றியும் நீ கவலைப்பட வேண்டாம். அவன் இந்நாட்டைவிட்டு எப்பொழுது வெளிக்கிளம்பலாம் எனயோசித்துக்கொண்டிருக்கிறான். ஆதலால் அவனும் என்சொற்படி கேட்பான் என்பதிற் சந்தேகமில்லை.

வி ஜ. பத்மா! நீ எதைச் செய்தாலும் சரி. யான் உன்னையே முற்றும் நம்பியிருக்கின்றேன்—அதிருக்கட்டும், நீ என் அன்பருக்கு உணவு அளிக்கும்போது அவர் என்னைப் பற்றி ஏதாவது பேசுவரோ?

ப த். பேசாமலென்ன! நான் கொண்டுபோகும் உணவுகளெல் லாம் நீ யனுப்புவதாகக் கூறினேன். அதற்கு அவர் தன்னுடைய அன்பார்ந்தவந்தனத்தைத் தெரிவிக்கும்படி சொல்லுவர். மற்றொரு சமயத்தில், இராஜகுமாரி என்னைப்பற்றி ஏதாவது கூறினாளா எனக்கேட்டார். சதா உங்களைப்பற்றிய பேச்சுத்தான் என நான் கூறி னேன்.

வி ஜ. போடி பத்மா! என்னைப் பரிகாசம் செய்கின்றாய்.

(ஓர் காவலன் பிரவேசம்)

காவ. அம்மணி! மகராஜர் ஓர் வைத்ய சன்யாசியுடன் இங்கு வருவதாகத் தங்களிடம் தெரிவிக்கச்சொன்னார்.

வி ஜ. நல்லது அவர்கள்வரட்டும் நீ செல், (காவலன் செல்ல.) அடி பத்மா! என் மனோவியாதியை அறியாது, வீணாகச் சிறந்த வைத்தியர்களெல்லாம் என்னைத் துன்பத்திற்குள் ளாக்குகிறார்களே! (சன்யாசி வேடங்கொண்ட சந்திர ஹாஸனும், ஜயசீலனும் பிரவேசித்தல்)

ஜ. சீ. ஐயா யோகீஸ்வரரே! இதோ, இவள்தான் என் புதல்வி விஜயாள்.

ச. ஹா. அரசே! எவ்வளவு காலமாக இவ்வியாதி இவளைப் பீடித்திருக்கின்றது?

ஜ. சீ. ஒருவருஷகாலமாக ? அதிலும், இந்தப் பத்துப் பதினைந்து தினங்களாக அதிகமாக இருக்கின்றது.

ச. ஹா. அப்படியா, குழந்தாய்! உன் கரத்தைக்கொடு பார்ப்போம். மகராஜ்! இவள் கையில் நல்ல பலன் தரும் ரேகைகள் காணப்படுகின்றனவே. அரசே! உடம்பில் வியாதியிருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு மனோ வியாதியே இவளைத் துன்பப்படுத்துகின்றது போலும். ஒருக்கால் தாங்கள் முன்பு என்னிடம் கூறியபடி தன் அன்னை இறந்ததனால் உண்டாகிய வருத்தத்தினால்தான் இப்படி இருக்கவேண்டும் என்று நினைக்கின்றேன். (தன் மூட்டைகளைக் கீழேவைத்துவிட்டு) எதுஎப்படியிருந்த போதிலும் இன்னும் ஒரு வாரத்திற்குள் என்னுடைய மந்திர சக்தியினாலும், வைத்திய சாஸ்திரப்படி அளிக்கும் ஔஷதங்களினாலும் குணப்படுத்தி விடுகின்றேன். இனி நீங்கள் கவலைப்படவேண்டாம். ஆனால் நான் தெரிவித்தபடி வியாதி சௌக்யமானவுடன், ஏழைகளுக்குக் குறைவில்லாமல் அன்னம் அளிக்கவேண்டும். அதுவே தாங்கள் எனக்காகச்செய்யும் பிரதியுபகாரம்.

ஜ. சீ. ஐயா! அப்படியே செய்கின்றேன். இக்காரியம்தானா ஓர் பிரமாதம்?

ச. ஹா. சரி, யான் முருகனுடைய சக்கரத்தை எழுதி, மந்திரம் ஜபித்த பிறகே, மருந்தை யளிப்பேன். அதுவரையில் என்னுடன் தயைசெய்து ஒருவரும் பேசலாகாது. (சக்கரத்தை எழுதி, மந்திரம் ஜபிக்க ஏற்பாடு செய்ய ஓர் காவலன் பிரவேசம்.)

காவ. அரசே! இந்திரஸேனரிடமிருந்து குரூரவர்மர் தங்களைக் காண வந்திருக்கின்றார்.

ஜ. சீ. சீக்கிரம்வரச்சொல்(காவலன்செல்லக் குரூரவர்மன் பிரவேசம்) வரவேண்டும்! வரவேண்டும், இந்திரஸேனர் க்ஷேமந்தானே?

கு. வ. க்ஷேமந்தான். விஜயாளுக்கு உடம்பு எவ்வாறு இருக்கின்றது? (சன்யாசியை உற்றுப்பார்த்துவிட்டு) ஆஹா! இவர் யார்? எவ்விடமோ பார்த்திருப்பதாக நினைவு வருகின்றதே. ஐயா, பெரியவரே! தாங்கள் யார்?

ஜ. சீ. அவர் ஒரு பெரியவர். மாந்திரீகம், ஜோஸ்யம், வைத்தியம், முதலியவைகளைச்செவ்வனே அறிந்த பண்டிதர்.

சு. வ. அப்படியா! பெரியவாள் இருப்பது எவ்வூரோ?

ச. ஹா. நாம் இருப்பது பாண்டிய நாடு. ஆனால் நாம் எல்லா நகருக்கும் செல்வோம்.

ஜ. சீ. நண்பரே! அவர் மந்திரம் ஜபிக்கப் போகின்றார். இப்பொழுது அவருடன் பேசவேண்டாம். நல்லது, இந்திரஸேனர் சமாசாரமென்ன? அவர் என்ன தெரிவித்தார்?

சு. வ. சமாசாரம் தெரியாதா உங்களுக்கு. பாஸ்கர விஜயர் இவ்வுலகைவிட்டு நீங்கிவிட்டார். இந்திரஸேனர்தான் இப்பொழுது அரசர்.

ஜ. சீ. பேஷ்! தொலைந்தானா அந்தத்துரோகி. ஆமாம் இந்தப் பயலை என்ன செய்வது! இந்திரஸேனர் இவன் விஷயமாக ஏதாவது தெரிவித்தனரா?

சு. வ. அவன் விஷயமாகத்தான், நான் தங்களிடம் இப்பொழுது வந்தது. வாருங்கள் உமது இரகசிய அறைக்குச்சென்று பேசுவோம்.

ஜ. சீ. ஆம் அதுதான்சரி. பத்மா! நீ இவ்விடத்திலேயே இப்பெரியவருடன் இரு. நான் சற்றுநேரம் கழித்து வருகின்றேன். சுரூரவர்மரே! என்னுடன் வாரும். (ஜயசீலனும், சுரூரவர்மனும் செல்வதைச் சந்திரஹாஸன்கூர்மையாகக் கவனிக்கின்றான்.)

ச. ஹா. (திடீரென விஜயாளை நோக்கி) அம்மணி! இப்பொழுது உமது தந்தையாருடன் சென்றவர் யார்?

பத். யாராயிருந்தால் உமக்கென்ன ஐயா?

ச. ஹா. இல்லை, இவரை நான் கூர்ஜரதேசத்தில் பார்த்ததுமாதிரியாகத் தோன்றுகிறது. அதனால்தான் கேட்டேன்.

வி ஜ. கூர்ஜரதேசத்திற்குத் தாங்கள் சென்றிருக்கிறீர்களோ?

ச. ஹா. ஆம், வீரஸிம்ஹனது மணவிஷயமாகச் சில ஜாதகங்கள் பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன்.

வி ஜ. அவருக்கு எந்தக் கன்னிகையின் ஜாதகம் பொருந்தியிருக்கின்றது?

ச. ஹா. இரண்டு மூன்று ஜாதகங்கள்தான் பொருத்தமாகயிருக்கின்றன. சோழராஜனின் பெண், நேபாளதேசத்துப் பெண், தங்களுடைய ஜாதகம், இவைகளெல்லாம் நன்ருகப் பொருந்தியிருக்கின்றன.

வி ஜ. ஏன்? அப்படியாயின் அப்பெண்களில் ஒருபெண்ணை நிச்சயம் செய்கிறதுதானே!

ச. ஹா. செய்தார். பயன்படவில்லை போலிருக்கின்றது. நாம் எதற்கு அதையெல்லாம் சொல்லவேண்டும். அதிருக்கட்டும், தங்கள் தந்தையுடன் கூடச்சென்றவர் யார்?

வி ஜ. அவர்தான் கூர்ஜரதேசத்து மந்திரி குரூரவர்மர்.

ச. ஹா. அப்படியா! ராஜகுமாரி! கொஞ்சநாளைக்குமுன்பு தங்கள் தந்தைக்கும் கூர்ஜரதேசத்து அரசருக்கும் ஏதோ சண்டை என்று கேள்விப்பட்டேனே. அப்படியிருக்க, விரோதியான உங்கள் தந்தையிடம் குரூரவர்மன் வரக் காரணமென்ன?

வி ஜ. ஐயா! அவ்விஷயத்தைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. இவ்விடத்திலிருந்துகொண்டு இவ்விஷயமாக இனிப்பேசாதீர். வேறு யார் காதிலாவது விழுந்தால் உம்மைக்கொன்று விடுவார்கள்.

ச. ஹா. இனிமேல் பேசவில்லை. (விஜயாள் மறைத்துவைத்திருந்த வீரஸிம்ஹனின் படம் தென்பட, ஆச்சர்யத்துடன்) அம்மணி! தாங்கள் வீரஸிம்ஹனைப் பார்த்திருக்கின்றீர்களோ?

வி ஜ. ஐயா! இனி வீரஸிம்ஹர் விஷயமாகப் பேசவேண்டாம். வந்த வேலையைப் பாருங்கள்.

ச. ஹா. என்னஅம்மணி கோபித்துக்கொள்ளுகிறீர்கள். தாங்கள் மாத்திரம் வீரஸிம்ஹனின் படத்தை வைத்துக்கொள்ளலாம், நான் மாத்திரம் அவரைப்பற்றித் தங்களிடம் வார்த்தையாடலாகாதோ?

வி ஜ. (திடுக்கிட்டு அதிகாரம் கண்ணிற்குத் தென்பட்ட வீரஸிம்ஹன் படத்தை மறைத்துக்கொண்டு) யாரையா நீர்? உடனே எழுந்து போகின்றீரா, அல்லது என் தந்தையைக் கூப்பிடவா?

ச. ஹா. இளவரசி! மன்னிக்கவேண்டும். யான் யாவற்றையும் அறிவேன். நீங்கள் வீரஸிம்ஹரைக் காதலிக்கின்றீர்கள்.

வி ஜ. ஐயா! வீண்வார்த்தைகள் இவ்விடம் பேசவேண்டாம். தயவுசெய்து இப்படத்தைப்பற்றி ஒன்றும் என் தந்தையிடம் கூறுதீர்கள். உமக்கு வேண்டிய பொருள் தருகின்றேன்.

ச. ஹா. இளவரசி! நான் கூறிய விஷயங்களைப்பற்றியும் உமது தந்தையிடம் தெரிவிக்கவேண்டாம். பிறகு என்னுயிர் போய்விடும்.

ப த். யாரையாநீர்? சன்னியாசி உடையுடன் வந்த வேஷக்காரரோ அல்லது.........

வி ஜ. சீ, பத்மா! பேசாமலிரு. ஐயா! உண்மையாகத் தாங்கள் யார்? சீக்கிரமாகத் தெரிவியுங்கள். பிறகு என் தந்தை வந்துவிடுவார்.

ச. ஹா. அம்மணி நான் யாராக இருந்தபோதிலும், என்னைக் காட்டிக்கொடுப்பதில்லை என்றுசத்தியம்செய்து கொடுத்தால், நான் உங்களுக்கு வேண்டிய உதவிசெய்வதுமன்றி, நான் யாரென்றும் தெரிவிக்கின்றேன்.

வி ஜ. சரி, நான் உங்களைக் காப்பாற்றுகிறேன். இது சத்தியம். நீர் யார், இங்குவந்த காரணமென்ன, என்பதைச் சீக்கிரம் தெரிவியும்.

ச. ஹா. அம்மணி! யான் வீரஸிம்ஹனது ஆப்த நண்பன். என் பெயர் சந்திரஹாஸன். எப்படியாவது வீரஸிம்ஹரைச் சிறையிலிருந்து தப்பிக்கச்செய்ய வேண்டுமென்றே இக்கோலத்தை அடைந்தேன். தங்களுடைய உளக் கருத்தையு மறிந்தேன். தாயே! என் நண்பனைக் காப்பாற்றுங்கள். மேலும் என்னுடைய நண்பராகிய தங்கள் காதலரைத் தாங்கள்மனதுவைத்தால் காப்பாற்றலாம் என்பதில் ஐயமில்லை.

வி ஜ. ஐயா! உம்முடைய பெயரையும் வீரத்தன்மையையும் யான் முன்பே கேள்விப்பட்டிருக்கின்றேன். ஐயோ! என் தந்தையிடம் வெகு ஜாக்கிரதையாக நீர் இனி நடந்துகொள்ள வேண்டும். உம்மை இன்னாரெனக் கண்டுபிடித்து விட்டாலோ......

ச. ஹா. அம்மணி! என் உயிருக்கு அஞ்சினவனாயிருந்தால் இந் நாட்டில் நான் காலைவைத்திருப்பேனா? அம்மணி! தாங்களோ அவரைக் காதலிக்கின்றீர். அவரும் தங்களுடைய படத்தைக்கண்டு வியந்து தங்களையே மணம் செய்ய எண்ணியுள்ளார். இவ்விஷயத்தை முன்பு என்னிடமும் ஒருசமயம்கூறினார். இதுசத்யம். இப்பொழுது அவருக்கு நீங்கள் உதவிசெய்தால் உங்களை எந்நாளும் மறக்க மாட்டார். ஆதலால், இன்றே அவர் தப்பிச்செல்லும்படியான ஓர் மார்க்கத்தைச் செய்யவேண்டும்.

வி ஜ. அவர் தப்பித்துச்சென்றுவிட்டால், என் கதி என்ன ஆவது? நான் அவரை எப்படியடைவேன்?

ச. ஹா. ஏன்! தாங்களும், அவருடன் சென்றுவிடுவது.

வி ஜ. ஐயா! யான் தங்களை முற்றிலும் நம்பிவிட்டேன். ஆதலால் இனி நான் செய்யவேண்டியதை விளங்கச் சொல்லும்.

ச. ஹா. அம்மணி! இன்று சிறைச்சாலையின் சாவியை எப்படியாவது தங்கள் தந்தையிடமிருந்து எடுத்துவந்து, இரவு சுமார் பன்னிரண்டு மணிக்கு சிறைச்சாலைக் கதவைத் திறந்து வீரஸிம்ஹரையும் அழைத்துக்கொண்டு, கூர்ஜர தேசத்தின்பாதையில் இருங்கள். யான் அவ்விடம்வந்து யாவரையும் அழைத்துச் செல்கின்றேன். இவ்வளவு தாங்கள் செய்தால் போதுமானது.

வி ஜ. சிறைச்சாலையில் காவலர்கள் இருப்பார்களே?

ச. ஹா. (உடைவாளை உருவி) அவர்களை நான் தீர்த்துவிடுகின்றேன்.

பத். விஜயா! பிறகு, என் காதலர் கருணாகரரும், என் சகோதரன் சுகுணதீரனும், உனது காதலனுக்காக உயிரிழக்கவா வழிசெய்கின்றாய்?

வி ஜ. பத்மா! நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. அவர்களை நீ முன் கூறியபடி இன்றே நம்வசம் திருப்பிவிடு. மேலும், நீயும், உன் காதலனும், உன் சகோதரனும் என்னுடன் இந்நாட்டை விட்டுத் தப்பிச்செல்வதற்கு இன்றே தயாராக இருக்கவேண்டும். தெரிகிறதா?

பத். விஜயா! அவ்விதமே செய்துமுடிக்கின்றேன். நீ கவலைப் படாதே.

வி ஜ. நண்பரே! இன்று எப்படியாவது உமது நண்பரைத் தப்புவித்து, அவருடன் கூர்ஜரதேசத்துப் பாதையில் இரவு ஒரு மணிக்கு நான் உம்மை சந்திக்கின் றேன். இனி இக்கொடிய தந்தையுடன் வாழ எனக்கு இஷ்டமில்லை. எப்படியாவது அவரிடமிருந்து சிறையின் சாவியை இன்றே பெற்றுவிடுகின்றேன்.

ச. ஹா. அம்மணி! இவ்வுடையுடன் தாங்கள் இந்நாட்டைவிட்டு வெளியில்வருவது அழகல்ல. நான் இரண்டு சன்யாசி உடைகளை அனுப்புகின்றேன். ஒன்றை தாங்கள் அணிந்து கொண்டு மற்றொன்றை வீரஸிம்ஹறனுக்கு அளித்து விடுங்கள். ஜாக்கிரதை! வீரஸிம்ஹறன் சிறையைவிட்டு வெளியில்வந்து தன் வாளைக்கையில் எடுக்கும்வரை வெகு ஜாக்கிரதையாக ஒவ்வொரு காரியத்தையும் தாங்கள் செய்யவேண்டும். பிறகு எல்லோரும் சந்தோஷமாக வாழலாம். அம்மணி! அதோ உமது தந்தைவருகின்றார். ஜாக்கிரதை! (ஜயசீலனும் துநரவர்மனும் வர, சந்திரஹாஸன், அப்பொழுதுமந்திரம் ஜபித்து எழுந்தவன்போல் எழுந்திருக் கின்றான்) அரசே! இன்னும் இரண்டொரு தினத்திற்குள் குணமடையும்படி செய்துவிடுகின்றேன். இனி கவலை வேண்டாம். நான்போய் அதிகாலையில் வருகின்றேன்.

ஜ. சீ. மிகவும்சந்தோஷம். குழந்தையைக் காப்பாற்றவேண்டி யதுதங்கள் கடமை. (சந்திரஹாஸன் தயங்கிச்சென்று மறை ந்துநிற்கின்றான்)

வி ஜ. தந்தையே! இவர் இங்குவந்தது முதற்கொண்டு என்னை அறியாமலேயே ஓர்வித புதிய பலம் என் உடம்பில் ஏற்பட்டிருக்கின்றது. ஆதலால் என்ஆபரணங்களை இன் றுவது அணிந்துகொள்ள ஆசைப்படுகின்றேன். பத்மா!

வா நாமே போய் அவைகளை எடுத்து அணிந்துகொண்டு வரலாம்.

ப த். விஜயா ! அறையின் சாவி வேண்டாமா ?

வி ஜ. இதோ வாங்கி வருகின்றேன். பிதா ! உங்கள் அறையின் சாவிக்கொத்தை என்னிடம் கொடுங்கள்.

ஜ. சீ. கண்ணே ! இதோ பெற்றுக்கொள். (விஜயாள் ஜயசீலனிடமிருந்த சாவிக்கொத்தை சந்தோஷத்துடன் வாங்கிச்செல்லல்) நண்பரே ! இன்றுதான் என் புதல்வி என்னுடன் சந்தோஷமாகப் பேசினாள்.

து. வ. அப்படியா ! மிகவும் சந்தோஷம். அரசே ! இன்றே நான் நகருக்குச் செல்லவேண்டும். ஞாபகமிருக்கட்டும். இன்னும் இரண்டொரு தினத்திற்குள் வீரஸிம்ஹனை ஒழித்து விடுங்கள். இந்திரஸேனரின் விவாக விஷயம், நான் முன்பு தெரிவித்தபடி பின்னர் செய்துவிடலாம்.

ஜ. சீ. தாங்கள் சென்றுவாருங்கள். நான் அப்பயலை முடித்து விடுகின்றேன். இந்திரஸேனரை நான் கேட்டதாகச் சொல்லவும்.

து. வ. அப்படியே தெரிவிக்கின்றேன். சென்றுவருகிறேன். (இருவரும் செல்ல, சந்திரஹாஸன் மறுபடியும் வருதல்)

ச. ஹா. குரூரவர்மா ! உன் வாழ்நாட்களுக்கு இன்றே ஓர் முடிவு செய்து விடுகின்றேன். இப்பொழுதே உன்னையான் பின்தொடர்ந்து உனக்குத் தக்கவழி செய்கின்றேன்.

(செல்லல்)

(காக்ஷி முடிகிறது.)

## அங்கம் 4.—காக்ஷி 1.

---

இடம் :—உதயபுரியின் சிறைச்சாலை—நடு இரவு.

(வீரஸிம்ஹன் வருத்தத்துடன் சிறையில் புரண்டு, புரண்டு நித்திரை செய்கின்றான். சிறிதுநேரம்செல்ல, பத்மாக்ஷியும் சன்னியாசி வேடம்பூண்ட விஜயாவும் வர, அவ்விடமிருக்கும் காவலர்கள் வந்தனம் புரிகின்றார்கள்)

வி ஜ. கருணாஹரரே! அரண்மனையின் பின்புறம் நான்கு புரவிகள் இருக்கின்றன. பத்மா! நான் காண்பித்த வழியாக இவ்விருவரையும் வெகு சீக்கிரமாக அழைத்துச்செல். நான் சிறையிலிருப்பவரை அழைத்து வருகின்றேன்.

கருண. அப்படியே செய்கின்றோம். சுகுணதீரா! இனி இந்த நாட்டின் பக்கம் தலைகாட்டலாகாது. பத்மா! செல்லலாம் வா. (மூவரும் செல்லல்)

வி ஜ. (நான்கு பக்கங்களிலும் பார்த்துவிட்டு, தான் கொண்டுவந்த சாவியினால் சிறையின் கதவுகளைத் திறந்துவிடுகிறாள்.) ராஜகுமாரா! (கையால் தட்டுகிறாள். வீரஸிம்ஹன் திடுக்கிட்டு எழுந்திருக்கின்றான்)

வீ. ஸி. ஹா! இதென்ன ஆச்சர்யம். சிறையின் கதவுகளெல்லாம் திறக்கப்பட்டிருக்கின்றன. (சன்யாசியைப் பார்த்து) யாரையா நீங்கள்?

வி ஜ. ஐயா! கூச்சல் போடவேண்டாம். இவ்வுடையை முதலில் அணிந்துகொண்டு பின்னர், என்னுடன் வாருங்கள்.

வீ. ஸி. ஆ! நான் காண்பது கனவா அல்லது நினைவா?

வி ஜ. கனவுமல்ல, நினைவுமல்ல, யாவும் நனவே.

வீ. ஸி. (உடையை அணிந்துகொண்டு) ஐயா! தாங்கள் செய்த இப்பேருதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்வேன்.

வி ஜ. ஒரே உபகாரம் நீர் எனக்குச்செய்யவேண்டும். நீர் இனி எனக்குச் சொந்தம் என்று சத்யம் செய்துகொடும்.

வீ. ஸி. அப்படியே என் தாயின்மீது ஆணை. நான் உமக்குச் சொந்தம்.

வி ஜ. சரி, அப்படியானால் என்னுடன் புறப்படும்.

வீ. ஸி. (தனக்குள்)பத்மாக்ஷி! உன்னிடம்சொல்லிக்கொள்ளாமல் செல்வதற்கு மன்னிக்கவும். ஆ விஜயா! ராஜகுமாரி!

வி ஜ. என்ன ஐயா! உளறுகின்றீர்.

வீ. ஸி. ஒன்றுமில்லை. புறப்படுங்கள். (இருவரும் செல்ல சந்திரஹாஸன், சன்யாசி உடையுடன் வருகின்றான்)

ச. ஹா. ஹே! தேவ தேவா! உமக்கு அனந்தகோடி நமஸ்காரம். அப்படிப்பாவியான குரூரவர்மனை என்னிடம் அகப்படச் செய்ததையும், அவனுடன் நான் தனிமையாக யுத்தம் புரிந்து, கயிற்றால் கட்டி, கூர்ஜரதேசத்துப் பாதையில் மறைத்து வைத்ததையும் நினைக்க எனக்கே ஆச்சர்யமாயிருக்கின்றது என் அதிர்ஷ்டவசமாக, இளவரசரும், விஜயாளும் இப்பொழுது தப்பிச்சென்றதை யான் என் கண்ணால் கண்டேன். ஆநந்தம் கொண்டேன். இனி வேறொன்றும் வேண்டேன். இனி யான் ஒருவருக்கும் பயப்படவேண்டியதில்லை. அடே! இந்திரஸேனா! உன் வஞ்சனை வெளிப்படும்காலம் கிட்டிவிட்டது. சரி இனி நாம் இளவரசரிடத்திற்குச் செல்வோம். நமக்காக அவர் கூர்ஜர தேசத்துப் பாதையில் காத்துக்கொண்டிருப்பார். நாம்அங்குச்சென்று, நம்மால் கட்டப்பட்டிருக்கும் குரூரவர்மனைக்கொண்டே, இந்திரஸேனனின் சூழ்ச்சிகளையெல்லாம் என் நண்பனுக்கு வெளிப்படுத்துகின்றேன். ஜயசீலரே! உமதுநாட்டிற்கும், இச்சன்யாசி உடைக்கும் வந்தனம். இனி யார் எதிர்ப்பினும் அஞ்சேன். (வாளை உருவிக்கொண்டு ஓடுகின்றான்)

(காக்ஷி முடிகிறது)

## அங்கம் 4—காக்ஷி 2.

---

இடம்:—ஓர் காடு.

(வீரஸிம்ஹன், விஜயாள், பத்மாக்ஷி, சுகுணதீரன், கருணாகரர் *முதலானவர் பிரவேசம்.*)

வீ. ஸி. (விஜயாளைப் *பார்த்து*) ஐயா! தாங்கள் சிறைச் சாலைக் காவலர்களையும் ராஜகுமாரியின் தோழியான பத்மாக்ஷியையும் உமது கைவசப்படுத்தியதை நினைக்க நினைக்க எனக்கு மிகவும் ஆச்சர்யத்தை உண்டாக்கு கின்றதே. ஆஹா! இச் சிறு வயதிலேயே காஷாய வஸ்திரத்திற்குட்பட்டு, மஹாதெய்வீகத்தன்மைபொருந் திய மஹானை யான் இன்றே கண்டேன். இது நான்பூர்வ ஜன்மத்தில் செய்த புண்யத்தின் பலன்தான் என்பதற் கையமுண்டோ? ஐயா! தாங்கள்செய்த பேருதவியை யான் எந்நாளும் மறவேன். தாங்கள் எனக்காக இனி சிரமப்படவேண்டாம். யான் சென்று வருகின்றேன். விடையளிக்கவேண்டும்.

வி ஜ. ஏன், மிகவும் அவசரந்தானோ?

வீ. ஸி. இல்லை. என் தாய் தந்தையர்களைப்பார்த்து வெகு நாளாகியதால், அவர்களை உடனே பார்க்கவேண்டும். ஐயா! தங்கள் பெயரை யான் அறியலாமோ?

வி ஜ. என் பெயரா? என் பெயர் விஜயன் (வீரஸிம்ஹனைத் *தவிர மற்றவர்கள் நகைத்தல்*)

வீ. ஸி. ஐயா! தங்களை எவ்விடத்திலோ வெகு சமீபத்தில் பார்த்த மாதிரியாகத் தோன்றுகிறதே. ஞாபகமில்லை பெரிய வரே! நேரமாகின்றது. யான் போய்வருகின்றேன். பத்மாக்ஷி! உன் ராஜகுமாரிக்கு என் வந்தனத்தைத் தெரிவிக்கவும். நான் அவளைக் கூடிய சீக்கிரமே வந்து காண்பதாக.........

பத். இல்லை. தாங்கள் அவ்வளவு சிரமப்படவேண்டாம். இப்பொழுதே அவர்களை இவ்விடத்தில் காணப்போகிறீர்.

வீ. ஸி. என்ன! நீ கூறுவது உண்மையா? அப்படியாயின் அவள் இருக்குமிடத்தைக்கூறு. நான் இப்பொழுதே செல்கின்றேன் அவ்விடம் (போக யத்தனிக்கின்றனன்.)

வி ஜ. (வீரஸிம்ஹனைத்தடுத்து) இளவரசே! உம்முடைய உயிர் எனக்குச்சொந்தம் என்று சிறைச்சாலையின் அருகில் உமது தாயின்மீது சத்தியம் செய்து கொடுத்தீர்களே! அதை மறந்துவிட்டீர்களோ? இதுதானு உம்போன்றவர்கட்கு அழகு! ஒரு காரணத்தின்பொருட்டு, நான்உங்களையே சதமென நினைத்திருக்க, என்னை நீங்கள் தனியேவிட்டுச் செல்லப்பார்க்கின்றீரே. இது தர்மமாகுமா? நண்பர்களே! இவரது சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா!

வீ. ஸி. இது ஏதடா தர்மசங்கடமாயிருக்கின்றது. ஆனால் என்னுடன் இப்பொழுதே கூடப்புறப்படுங்கள். இனி இங்கு தாமதித்தால் நாம் இறக்கும்படி நேரிடும்.

ப. த். ஆம்! எங்களையெல்லாம் நீங்கள்தான் இனி இரக்ஷிக்க வேண்டும்.

வீ. ஸி. சரி புறப்படுங்கள். (போக யத்தனித்தல்)

வி ஜ. பொறும்! பொறும். உமது நண்பன் சந்திரஹாஸன் வரட்டும்.

வீ. ஸி. என்ன! சந்திரஹாஸனு! அவன் எங்கிருக்கின்ருன்? (விஜயாளின் இருதோளையும்பிடித்துக்கொண்டு) முற்றுமறிந்த பெரியவரே! நீர் யார்? உண்மையைக் கூறுகின்றீரா இல்லையா?

வி ஜ. உரைக்கின்றேன். நீர் எனக்குச் சொந்தம்என்பது ஞாபகமிருக்கட்டும். (சன்யாசி அங்கியையும் தாடியையும் எடுத்துவிடுகிருள்)

வீ. ஸி. ஆ! விஜயா! விஜயா! என் உயிரைக்காத்து ரக்ஷித்த கற்பகமே! என் ஆருயிர்க்காதலியே! நீயன்ருே பெண். ஐயோ! இதுகாறும் உன்னை அடைவேணு என்று ஏங்கினேனே. என் மனுேபீஷ்டம் ஈடேறியது. பத்மாக்ஷி! உனக்கு வந்தனம். என்னைத் தப்புவிக்க உதவிசெய்த

வீரர்களே! உங்களுக்கும்அநேகவந்தனம். விஜயா! நான் உனக்கு என்ன கைம்மாறு செய்யவேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஹே, ஜகதீசா! உன் அற்புத மாயாசக்தியை யான் எவ்வாறு புகழ்வேன். சற்றுநேரத்திற்குமுன் நான்இருந்த நிலைமையென்ன? இப்பொழுது இருக்கும் நிலைமையென்ன? எல்லாம் நினது திருவிளையாடலே! என் அருமைக் கண்மணியே! என் மனநிலையை நன்கு அறிந்தும் நீ இவ்வளவு நேரம் என்னை வஞ்சிக்கலாமா?

வி. ஜ. எனதரசே! மஹாப்பாவியின் புதல்வியாகிய நான் தங்களுடைய பாதகமலங்களைத் தொடக்கூட யோக்கியதையற்றவளென்று பயந்தே இந்நேரம் பேசாமலிருந்தேன்.

வீ. ஸி. பெண்கள் திலகமே! உனக்கும் நிகரான கன்னியர்கள் இவ்வுலகிலுண்டோ! உன் தந்தை எனக்குச் செய்த கொடுமைகளுக்காக நான் உன் மேல்கொண்ட காதலை விட்டுவிடுவேனென்று நினைத்தனையோ? என் ஆருயிர்க் கற்பகமே! உனது மெய்க்காதலின் இரக்கியத்தை யான் இன்றே நன்கு அறிந்தேன்.

வி. ஜ. பிராணேசா! மன்னிக்கவேண்டும். தங்களிடத்தில் உள்ள உண்மைக்காதலின் சக்தியையும் யான் இன்று அறிந்துகொண்டேன். ஆயினும் தாங்கள் இவ்வளவு சந்தோஷமாக யிருப்பதற்குக் காரணம் தங்கள் நண்பர் சந்திரஹாஸர்தான். (சந்திரஹாஸன் ஓடிவருகின்றான்.)

ச. ஹா. அல்ல, விஜயாள்தான் காரணம்.

வீ. ஸி. ஆ என் தோழா! (இருவரும் தழுவிக்கொள்ளுதல்) சந்திரஹாஸா! என்ன! எல்லோரும் காவி வஸ்திரத்தில் மூழ்கினீர்கள்.

ச. ஹா. நண்பா! இதெல்லாம் காலத்திற்குத்தகுந்த கோலம். சற்றுப்பொறு. இதோ வருகின்றேன்.

வீ. ஸி. சந்திரஹாஸா! எங்கு செல்லுகின்றாய்?

ச. ஹா. உங்கள் பிரியமான நண்பனும், முதல் மந்திரியுமாகிய குரூரவர்மனை அழைத்துவர (செல்லல்)

வீ. ஸி. குரூரவர்மரா! அவர் எப்படி இங்குவந்தார்? இதுஎன்ன, இங்குநடக்கும் சம்பவங்களெல்லாம் ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியமாகத் தோன்றுகின்றனவே. (சந்திரஹாஸன் குரூரவர்மனைக் கட்டி இழுத்துவருதல்) நண்பா! இது என்ன கோலம். யார் இவரை இத்துன்பத்திற்குள்ளாக்கியது.

(பாய்ந்து கட்டை அவிழ்க்க விஜயாள் தடுக்கிருள்.)

வி ஜ. இச்சண்டாளனுக்கா உதவிசெய்ய எத்தனித்தீர்கள்? இவனும், உமது சிறிய தந்தையும் சேர்ந்தே தங்களை என் தந்தை கையில் சிக்க வைத்ததுமன்றித் தங்களைக் கொலை செய்யவும் எத்தனித்தனர்.

ச. ஹா. அடே மதிகெட்ட மூடனே! எதற்காக விரோதியான ஜயசீலரிடம் இன்றுவந்தாய்? சீக்கிரமாகப் பதில்சொல். இல்லாவிடில்........ஞாபகமிருக்கட்டும்.

வீ. ஸி. நண்பா! உன் செய்கை என் மனத்தை மிகவும் வருத்துகின்றது. பாவம், அவரை ஏன் இப்படி அல்லற்படுத்துகின்றாய்?

ச. ஹா. நண்பா! சற்றுப்பொறு. எல்லாம் விளங்கும். குரூரவர்மா! சீக்கிரம் சொல். இனி தாமதித்தால் தீர்த்துவிடுவேன்.

கு. வ. காருண்யமுள்ள இளவரசே! அடியேன் அறியாமற் செய்த பிழைகளைப் பொறுத்தருளவேண்டும். நான் உண்மையை உரைத்தால் என்னைக்காப்பாற்றுகிறீர்களா?

ச. ஹா. நான்தான் முன்பே தெரிவித்தேனே. உண்மையை உரைத்தால் நான் உன் உயிருக்காக இளவரசருடன் போராடுவேன். சீக்கிரம்.

கு. வ. இளவரசே! உமது சிறிய தந்தை இந்திரஸேனர் தங்களுக்கு உரித்தான ராஜ்யத்தை ஆள்க்கருதியும், இதோ நிற்கும் இப்பெண்மணியான விஜயாளைத் தான் மணம் செய்துகொள்ள எண்ணங்கொண்டும், தன் இரகசிய நண்பனை ஜயசீலரை நம் நாட்டின்மீது படையெடுக்கச் செய்தார். யுத்தம் செய்யும் நாளையில் ஒரு நாள் இந்திரஸேனர் உமக்கு மயக்க மருந்து அளித்தது

மன்றி, ஜயசீலனிடமும் உம்மை இரகசியமாக அனுப்பி விட்டார். நீர் சிறைப்பட்ட செய்தியை அறிந்த உமது தந்தை, பின்னர், ஆ! இளவரசே! மன்னிக்கவேண்டும்.

வீ. ஸி. என் தந்தைக்கு என்ன நேர்ந்தது? விரைவாகச் சொல்லும்!

து. வ. அரசே! இறந்துவிட்டனர்.

வீ. ஸி. ஆ தந்தாய்! தந்தாய்!! ஐயோ! விண்ணுலகம் சென்றீரோ! பாபி, நான் தங்களைப் பார்க்கவும் கொடுத்து வைக்காதவனானேனே. ஐயோ! என் தலையில் இப்படியா எழுதவேண்டும்! அடே இந்திரஸேனா! என் சிறிய தந்தையா நீ? கொலைகாரக்கள்வனே. ஆ! என் பிரிவினாலன்றோ என் தந்தை இறந்தனர். நான் பாவி. அம்மா! உமது மங்களமான முகத்தை இனி நான் எப்படிக்கண்டு சகிப்பேன்?

ச. ஹா. இளவரசே! நடந்தது நடந்துவிட்டது. இனியோசிப்பதிற்பயனில்லை. பழிக்குப்பழி வாங்குதலே மேல்...... குரூரவர்மா! இனி பாக்கி கதையும் முடித்துவிட்டு நீ இங்குவந்த காரணத்தையும் தெரிவித்துவிடு.

து. வ. அரசே! உமது தந்தை இறந்தவுடன், அந்தப்பாவி இந்திரஸேனன் உம்மையும் விஷமிட்டுக்கொல்லும்படி ஜயசீலனிடம் என்னை அனுப்பினான். ஆனால் தெய்வச் செயலினாலும் உம்முடைய நண்பர் சந்திரஹாஸனுதவியினாலும் தாங்கள் காப்பாற்றப்பட்டீர்.

வீ. ஸி. அடே கொலைகாரனே! நீயும் சேர்ந்துகொண்டா என்னைக்கொல்ல நினைத்தனை! உன்னை முதலில் தொலைக்கின்றேன். (வாளை உருவ, சந்திரஹாஸன் தடுக்கின்றான்)

ச. ஹா. நண்பா! என் பொருட்டு இவனுக்கு மாத்திரம் உயிர்ப்பிச்சை அளிப்பாய்.

வீ. ஸி. யாரது என்னைத்தடுப்பது (கோபத்துடன் திரும்பிப்பார்த்து) சந்திரஹாஸா! உனக்காக இவனை மன்னித்தேன். நண்பர்களே! இனி புறப்படுங்கள். இப்பொழுதே சென்று என் சிறிய தந்தையைப் பழிக்குப்பழி வாங்குகின்றேன்.

சந்திரஹாஸா! குரூரவர்மனையும் கைக்கட்டுகளுடன் அழைத்துவா. விஜயா! புறப்படு என்னுடன். நாம் இருவரும் ஒரு குதிரையின்மீதேறிச் செல்லலாம். சந்திர ஹாஸனும் குரூரவர்மனும் ஓர் அஸ்வத்தின்மேல்வரட்டும். ஏனைய இரண்டு குதிரைகளில், ஒன்றில் பத்மாக்ஷியும் கருணாகரனும், மற்றொன்றில் சுகுணதீரனும் வரட்டும், புறப்படுங்கள் குதிரைகள் இருக்குமிடத்திற்கு.

(எல்லோரும் செல்லுகிறார்கள்)

(காக்ஷி முடிகிறது.)

## அங்கம். 5.—காக்ஷி 1.

இடம்:-இந்திரஸேனனின் தனி அறை.

(இந்திரஸேனன் யோசித்த வண்ணம் ஓர் ஆஸனத்தில் அமர்ந்திருக்கிறான்.)

இ.ஸே. ஸகல ஜீவர்களாலும் செய்யப்படுகின்ற நன்மை தீமைக்குத் தக்கவாறு பலனைக்கொடுக்கவல்ல ஜகதீசன் ஒருவன் உண்டென்று பரிபூரணமாகத் தெரிந்துகொண்ட யான், இச்சரீர வலிமையினாலடைந்த மமதையினாலும், இவ்விராஜ்யத்தை ஆளவேண்டுமென்கிற பேராசையினாலும், ஹா! எவ்வளவு பெரிய காரியத்தை மனத்துணிவோடு செய்துவிட்டேன். நான் அதனை நினைக்கும்போதே என் மனம் தடுமாறுகிறதே. (எழுந்து வேறு ஆசனத்தில் அமர்கின்றான்) ஐயோ! இதுவரையிலும் "தர்மமே ஜயம்" என சத்ய நெறியோடு இந்நாட்டைச் செங்கோல் செலுத்திய, எனது தமையனை விஷத்தைக் கொடுத்துமடியச்செய்தவனும், அவரேந்திய செங்கோலை பிடித்தவனும், அவர் அருமை மைந்தன் வீரஸிம்ஹனை நயவஞ்சமாக எதிரியின்கையில் அகப்படச் செய்தவனுமாகிய நான் பித்தனாய்த்திரியாமல் சுத்தனாய் விளங்க

ஒருவிதக்காரணமுமில்லையே. (யோசித்து) இப்பொழுதே இராஜேஸ்வரியிடம் சென்று, நாம் செய்த குற்றத்தைத் தெரிவித்து மன்னிப்புக்கேட்கலாமா? சீச்சீ! உதவாது. என்ன! என்னுடைய புத்தி என்றுமில்லாமல் இன்று இப்படி மாறுகின்றது. கொஞ்சம் மதுவைக்குடித்தால் யாவும் சரியாகிவிடும். (மதுவைக் குடிக்கின்றான்)

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

எனப்பெரியார் கூறியபடி நாம் ஒரு காரியத்தைச் செய்வதாக முன்வந்து இதுவரையிலும் பின்னடைந்ததில்லையே. அப்படியிருக்கக் கடந்துபோன காரியத்தைக் குறித்து வருந்துவதில் என்ன பிரயோசனம்? க்ரூரவர்மன் இந்நேரம் வீரஸிம்ஹனை வேலை தீர்த்திருப்பான். இனி நான் இவ்விராஜ்யத்திற்கு அரசன் என்பதிற் சந்தேகமென்ன! யாரடா காவலன்! (காவலன் ஓடிவருதல்) உடனே விரைந்து சென்று நமது நாட்டியப்பெண்களை இங்கழைத்து வா.

காவ. உத்திரவு மகராஜ். (காவலன் செல்லல்)

இ. ஸே. இனி யாருக்கும் நான் அஞ்சேன். க்ரூரவர்மன் வந்தவுடன் வீரஸிம்ஹன் இறந்தவிஷயத்தைத்தெரிவிப்பான். இன்னும் ஒருவருடத்திற்குள் ஜயசீலன் புதல்வி நம் வசமாவள். பின் எனக்கு என்ன குறைவு! சமயம் வரும்போது இக் க்ரூரவர்மனையும் யமனுலகிற்கு அனுப்பிவிடுவேன். ஆ! அதோ நம் நாட்டியப்பெண்கள் வருகின்றனர். (இருநாட்டியப்பெண்கள் பிரவேசித்தல்.)

நா. பெ. அரசே வந்தனம்.

இ. ஸே. அழகிற்சிறந்த பெண்மணிகளே! உங்கள் நடனத்தைப் பார்த்து வெகுநாளாகியதால் இன்றுவது கண்டுகளிக்கலாமென உங்களை வரவழைத்தேன். சீக்கிரம் என்னைச் சந்தோஷப் படுத்துங்கள்.

நா. பெ. எங்களரசே! அப்படியே செய்கின்றோம். (இருவரும் நாட்டியமாட, இந்திரஸேனன் சந்தோஷத்தினால் அவர்கள் கழுத்தில் முத்துமாலைகளை அணிகின்றான்)

இ. ஸே. பேஷ்! பேஷ்! போதும் போதும்! யான் மிகவும் சந்தோஷமடைந்துவிட்டேன். இப்படி என் அருகில் வந்து உட்காருங்கள். (நாட்டியப்பெண்கள் கூச்சமின்றி அவன் பக்கத்தில் அமர. இந்திரஸேனன் மதுவை வேண்டிய மட்டும்குடித்தபின் அவர்களுக்கும்கொடுக்கின்றான். இராஜேஸ்வரி தற்செயலாய் அங்கு வருகிறாள்.)

இரா. ஹா தெய்வமே! (முகத்தைத்தன் கைகளால் மூடிக்கொள் கிறாள். நாட்டியப்பெண்கள் இருவரும் திடுக்கிட்டு ஓடிவிடுகின் றனர். இந்திரஸேனன் மதுஉள்ளகிண்ணத்தைக் கையில் வைத் துக்கொண்டே இராஜேஸ்வரியின் அருகில் நெருங்குகின்றான்.)

இ. ஸே. ஹே! இராஜேஸ்வரி! இதை நீ குடிப்பாயாகில் தெய்வ லோகத்திலமரலாம்.

இரா. சீ! குடிகாரா! வாயை மூடு. யாரோடு வார்த்தையாடு கின்றாய் என்பதை மறந்தனையோ? மூடா! இப்பொழு தே யான் உன் அயோக்யத்தனத்தைக் குடிகளிடத்தில் தெரிவித்து உன்னை இருக்கும் இடம் தெரியாமற்செய்து விடுகின்றேன். இனி உனக்கு நான்சற்றேனும் பயப்படப் போவதில்லை யாதலால் இப்பொழுதே வீரர்களை வேண் டிக்கொண்டு, வீரஸிம்ஹனை வரவழைக்க ஏற்பாடு செய் கின்றேன் பார்.

இ. ஸே. (கோபத்துடன் கையிலிருக்கும் பாத்திரத்தை எறிந்துவிட்டு) ஏ! மூதேவி! என் வீரர்களுடன் பேச உனக்கு வெட்கமில்லை? சீ! நீயும் ஓர் உத்தமப் பெண்ணா? ஒன்றுக்கும் உதவாத உன் மைந்தனால் என்னை என்ன செய்ய முடியுமென்று நினைத்திருக்கிறாய்! அவனை இந்நேரம் ஜயசீலன் யமபுரத்திற் கனுப்பியிருப்பானே (கைகள் கட்டுண்ட தூரவர்மன் பிரவேசிக்கின்றான்)

தூ. வ. ஹே! இந்திரஸேனா! இளவரசர் தப்பி ஓடி விட்டார். இனி என் செய்வேன்!

இ. ஸே. அடே! மூடனே! நான் யார் என்பதை மறந்து பேசு கின்றனையோ! ஜாக்கிரதை! நாவை உள்ளடக்கிப்பேசு.

தூ. வ. சீ! கொலைகாரனே! போதும் உன்னுடைய சகவாசம் இனிநான் வீரஸிம்ஹனது நண்பன் எனஅறிவாய். உன் னுடைய யோக்கியதை யெல்லாம் நன்கு புலப்பட்டு விட்டது.

இரா. குரூரவர்மரே! என்ன சமாசாரம்? தங்கள் கைகளைக் கட்டியது யார்!

தூ. வ. அம்மணி! இன்னும் சற்றுநேரத்தில் எல்லாவற்றையும் தாம் அறிவீர்கள். ஜாக்கிரதை! இச்சண்டாளன் எதிரில் தாங்கள் நிற்கவேண்டாம். அண்ணனை வஞ்சனையாகக் கொன்ற கொலைகாரன், வீரஸிம்ஹனை சஞ்சலத்திற்குள் ளாக்கிய சதிகாரன்,............

இ. ஸே. (கோபத்துடன் பற்களைக் கடித்த வண்ணம்) அடே! சண்டாளத் துரோகி! என்னுடன் இருந்துறவாடிய நீ இப்பொழுது என்னையுமா ஏமாற்றப் பார்க்கின்றாய்! இதோ உன்னை முதலில் தொலைக்கின்றேன். (அவன்மேல்பாய்ந்து கழுத்தைத்தன் இருகரங்களாலும் நெறிக்கின்றான்.)

இரா. ஐயோ! கொலை, கொலை! யாராவது உதவிக்கு வாருங்கள்.

தூ. வ. இளவரசே! என்னைக்கொல்கிறான், காப்பாற்றும்

வீ. ஸி. (வேகமாகஓடிவருகின்றான். பின்னால் சந்திரஹாஸன், விஜயாள் முதலானவர் பிரவேசம்.) குரூரவர்மா! இதோ வந்தேன். (இந்திரஸேனன் மேல் பாய்ந்து குரூரவர்மனை விடுவித்து) அடே வஞ்சக சிகாமணியே! உன்னை இன்றே முடித்து விடுகின்றேன். சண்டாளா! இனி அரைக்ஷணங்கூட நீ உயிருடன் இருத்தலாகாது. பேராசைபிடித்த பேயே! இவ்வற்ப ராஜ்யத்தை யாளவேண்டுமென்ற ஆசையினால் அறிவிழந்து, என்னையுமா கொல்ல நினைத்தாய்! உன்னுடைய யோக்கியதைக்கு ராஜ்யம் வேறு வேண்டும். அடேசதிகாரா! இன்றே நீ தொலையவேண்டும், அல்லது நான் ஒழிய வேண்டும்.

இ. ஸே. அடே! அற்பனே! என்னிடமா உன் வீரத்தனத்தைக் காட்ட முயலுகின்றாய்! புலிக்குமுன் பூனை எம்மாத்திரம்? அடே அறிவிலி! உன் தந்தையைக்கொன்ற யான், சிறிது பொழுதில், உன்னையும் அவனிடத்திற் கனுப்புகின்றேன் பார். (வீரஸிம்ஹன்மேல் பாய்கின்றான்)

வீ. ஸி. அடே பாவீ! என் தந்தையை நீயா கொன்றாய்! இனி உன்னை விடேன். (இருவரும் யுத்தம் செய்கின்றார்கள்)

இரா. வீரஸிம்ஹா ! ஜாக்கிரதை.

ச. ஹா. அம்மணி! தாங்கள் கவலைப்படவேண்டாம். இதோ பாருங்கள் இந்திரஸேனனது கரங்கள் சளைத்துவிட்டன.

வீ. ஸி. (இந்திரஸேனனைக் குத்தி வீழ்த்துகின்றான்)என் தந்தையைக் கொன்ற கொலைகாரனைப்பழிக்குப்பழி வாங்கிவிட்டேன்.

இ. ஸே. ஹா ! "கெடுவான் கேடு நினைப்பான்" (இறத்தல்)

வீ. ஸி. பத்மாக்ஷி ! என் தாயையும், விஜயாளையும் அந்தபுரத்திற்கு அழைத்துச்செல். (விஜயாள், இராஜேஸ்வரி, பத்மாக்ஷி மூவரும் செல்லல்) குரூரவர்மரே ! உம்மை மன்னித்தேன். இனி ஜாக்கிரதை! என் சிறிய தந்தையை, அரசர்களுக்குரிய மரியாதையுடன் அனுப்ப ஏற்பாடு செய்யும். சந்திரஹாஸா ! அவர்கட்டுக்களை அவிழ்த்துவிடு| (கட்டை அவிழ்த்து விடுதல்)

கு. வ. உத்திரவு. அரசே ! (செல்லல்)

வீ. ஸி. நண்பா ! உடனே நமது படைகளைத் திரட்டிக்கொண்டு உதயபுரிக்குச் சென்று ஜயசீலரை மரியாதையாக இங்கு அழைத்துவா. வரத்தடை செய்தால் யுத்தம் செய்து அவரைப் பிடித்துவா. மேலும் இதுவரையிலும் நடந்த விஷயங்களை யெல்லாம் அவரிடம் தெரிவித்துவிடு.

ச. ஹா. நண்பா ! இன்றே யான் செல்லவேண்டுமோ ?

வீ. ஸி. ஆம் இன்றே செல்லவேண்டும். திரும்ப வந்து உனது தாய் தந்தையர்களைப் பார்க்கலாம்.

ச. ஹா. நண்பா ! வந்தனம் சென்று வருகின்றேன். (செல்லல்)

வீ. ஸி. (அவன் சென்றதிக்கை நோக்கிச் சிறிதுநேரம் பார்த்துவிட்டு) ஹா ! நண்பனென்றால் இவன்போலன்றோ இருத்தல் வேண்டும். பாவம் ! தன் தாய்தந்தையரைப்பார்க்கஆவல் கொண்டவனை மீண்டும் அனுப்பினேனும். என்னசெய்வது

யாவும் காலத்தின் செயல். சீ! இனி அன்னையிடம் சென்று இதுவரையிலும் நடந்த விருத்தாந்தங்களைக் கூறுவேன்.

(செல்லல்)

(காக்ஷி முடிகிறது.)

## அங்கம் 5.—காக்ஷி 2.

இடம்:—கூர்ஜரதேசத்து அந்தப்புரம்.

(விஜயாள் வருத்தத்துடன் ஓர் ஊஞ்சலில் உட்கார்ந்த வண்ணம் யோசனையிலிருக்கிறாள்)

வி ஜ. நான் கோரிய காதலனை அடைந்து காந்தர்வ விவாகம் செய்துகொண்டதின் பயனாகத் தந்தையின் விரோதத்தை அடைந்தேனே! இனி அவருடைய திருமுகத்தை எப்படிக் காண்பேன். (பின்புறமாக வீரஸிம்ஹன் வந்து நிற்கின்றான்) ஐயோ! நான் தாயையும் இழந்து, தந்தையையும் விரோதித்துக்கொண்ட பாவியானேனே. ஆ, தந்தையே! (அப்படியே ஊஞ்சலின்மீது உள்ள தலையணையில் சாய்கிறாள்)

வீ. ஸி. (பின்புறமாக வந்து ஓர் மாலையை அவள் கழுத்தில் போட்டு அருகில் அமர்ந்து) கண்ணே! கவலைப்படாதே. நான் இன்று உனக்கு மிகவும் சந்தோஷமான ஒரு சமாசாரத்தைத் தெரிவிக்க வந்திருக்கிறேன்.

வி ஜ. என்ன பிராண நாதா? சீக்கிரமாகத் தெரிவியுங்கள்.

வீ. ஸி. இதோ! (உரத்த சப்தமாய்) சந்திரஹாஸா!

(சந்திரஹாஸன் வருதல்)

ச. ஹா. நண்பா! நான் இங்கு வந்ததற்கு மன்னிக்கவும்.

வீ. ஸி. அதனால் குற்றமில்லை. நான் கூறியபடி அவரை இங்கு அழைத்துவா.

வி ஜ. யார் வரப்போகின்றார்கள்? (ஜயசீலன் வருதல். பின்புறம் இராஜேஸ்வரி, பத்மாக்ஷி, சுகுணதீரன், கருணாகரன் முதலியவர்கள் பிரவேசித்தல்) அப்பா!

ஜ. சீ. ஆ! விஜயா (இருவரும் அன்புடன் தழுவுதல்) வீரஸிம்ஹரே! என்னை மன்னிக்கவேண்டும். நான் உம்முடைய பிரதாபத்தை அறியாதுசெய்தபிழைகளைப் பொறுத்தருளி, என்னைக் கௌரவமாக நடத்தும்படி மிகவும் வேண்டிக்கொள்கின்றேன்.

வீ. ஸி. ஜயசீலரே! உம்முடைய புதல்வியை நான் திருட்டுத்தனமாக அழைத்துவந்ததுமன்றி தைரியமாகக் காந்தர்வமணம் செய்துகொண்டதற்குத் தாங்களும் என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஜ. சீ. ராஜகுமாரா! என் புதல்வி மெய்க்காதலுடன் தக்க கணவனையே தேடிக்கொண்டதால் நான் இவ்விஷயத்தில் பெரிதும் மகிழ்ச்சியை அடைந்தேன். இளவரசே! நீங்கள் இருவரும் நீண்ட காலம் இருந்து இவ்விராஜ்யத்தை அரசாள்வீராக.

காக்ஷி முடிகிறது.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

[Pri]nted at the Purnananda Press, Tanjore.

## FOREWORD FOR

**Rajasekara or The Three Mysterious outlaws.**

BY

**Rao Bahadur P. Sambanda Mudaliar,** B. A., B. L.,
Judge of the Small Cause Court, Madras.

---

I have gone through a preliminary copy of the work which the author Mr. N. VISWANATHAN has kindly sent me. It gives me pleasure to do so. The style of the work is simple and refined without being pedantic; and the characters are pretty well drawn. If good wine needs no bush, a good work ought not to require any introduction—at least a lengthy one. With these I commend this work to all lovers of Tamil language and literature.

Wishing the author all success,

Court House, Egmore,
Madras.

P. Sambandam.

---

## OPINION.

Tanjore,
5-11-27.

I have perused with interest Mr. N. Viswanathan's new drama RAJASEKARA. Its plot is ingenious and interesting and it has got an attractive diversity and variety of situation and dialogue and sentiment and emotion. It shows how the author is a capable actor as well. The dramatic literature in Tamil is yet in the making whereas in Sanskrit great classic dramas came into existence long ago. This is at once a handicap and an opportunity.

I wish the author every success,

K. S. Ramaswamy Sastry,
Sub-Judge, Tanjore.

---